

# Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் மூலம் பிதாவாகிய தேவன் செய்த அதிசயத்தக்க சாட்சிகள்

## சுயநினைவை இழந்து உயிருக்கு போராடிய மகனுக்கு மறுஜீவன் தந்த அற்புதர்



எனது தங்கை மகனுக்கு மஞ்சள் காமாலை நோய் வந்து மிகவும் கஷ்டப்பட்டான். அவனது சரீரம் மிகவும் பெலவீனமானது. எதுவும் அவனால் சாப்பிட முடியாது. தானாக உளறுவான், சுயநினைவு அவனைவிட்டு கொஞ்சம் கொஞ்சமாக போனது. மருத்துவரிடம் அழைத்து சென்ற பொழுது அவர்கள் பரிசோதித்து விட்டு வேறு மருத்துவமனைக்கு சிபாரிசு செய்தார்கள். அவர்கள் சொன்ன அந்த புகழ்பெற்ற மருத்துவமனைக்கு மகனை அழைத்துச் சென்றோம். அவர்கள், **மிகுந்த ஆபத்தான கட்டத்தில் இருப்பதால், உயிர் பிழைப்பது கடினம் என்ற காரணத்தினால் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க மறுத்துவிட்டார்கள்.** இதனால் நாங்கள் யாவரும் அவனை குறித்து மிகவும் கவலையடைந்து பயந்தோம். உடனடியாக Dr.ஆனந்த ஸ்திரா அவர்களை தொலைப்பேசியில் தொடர்பு கொண்டோம். **ஐயா அவர்கள் நிலைமையை கேட்டறிந்து மகனுக்காக அப்பொழுதே ஜெபித்தார்கள். நாங்கள் அனைவரும் சற்றும் எதிர்பாராத வண்ணம் ஸ்டரச்சரில் படுக்கையில் கண்களை மூடியிருந்த எனது தங்கை மகன் ஜெபத்திற்கு பிறகு கண்களை திறந்தான்.** இது எங்கள் அனைவருக்கும் மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. உடனடியாக சிகிச்சையளிக்க ஒப்புக்கொண்டனர். **தேவ கிருபையால் ஒருசில நாளில் மகன் உளறுவதை நிறுத்தினான், சாப்பிட ஆரம்பித்தான். பெலவீனமான நிலை மாறியது. உயிருக்கு போராடிய மகன் ஒரே ஒரு ஜெபத்தினால் அற்புதமாக மறுவாழ்வு பெற்றான்.** இது எங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் மறக்க முடியாத நிகழ்வாகும். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்

- திருமதி. குளோரி, புதுக்கோட்டை

## வறுமையின் நிமித்தம் ஆடுகளை மேய்த்த நிலையிலிருந்த சகோதரியை தாவீதைபோல உன்னத நிலைக்கு உயர்த்தின சர்வவல்லவர்!



நான் நடுநிலைப்பள்ளியில் படித்துக் கொண்டிருந்த பொழுது எனது குடும்ப வறுமையின் நிமித்தம் **பேருந்து கட்டணம் கூட இல்லாமல் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தேன்.** மேலும் பள்ளிக்கு அநேக நாள் செல்லாமல் இருந்துள்ளேன். அந்த நிலையிலும் நான் கஷ்டப்பட்டு படித்தேன். **எனது வீட்டிற்கு அருகில் உள்ளவர்கள் வீட்டிற்கு அன்பரின் ஊழியம் பத்திரிக்கை வரும். அதை படிக்கும் சூழ்நிலை ஏற்பட்டது.** அதிலிருந்த செய்திகள், சாட்சிகள் என்னை அதிகமாக தொட்டது. எனவே ஒவ்வொரு மாதமும் அந்த பத்திரிக்கையை படிப்பேன். இதனால் **இயேசு கிறிஸ்து மீது எனக்கு அதிக விசுவாசம், நம்பிக்கை வந்தது.** அதுமாத்திரமல்ல, திருநெல்வேலிக்கு Dr.ஆனந்த ஸ்திரா **அவர்கள் வரும்பொழுது எல்லாம் நானும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டு எனது படிப்பிற்காக ஜெபித்துக் கொண்டேன். கர்த்தர் என்னை அதிகமாக ஆசீர்வதித்தார். எனது வறுமையிலும் நன்கு படித்து இன்று அரசு அதிகாரியாக பணியாற்றி வருகின்றேன்.** மேலும், IAS தேர்விற்கும் என்னை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறேன். என்னை பார்த்து எனது தெருவில் அநேகர் கேலி செய்தது உண்டு. அவர்களுக்கு முன்பாக கர்த்தர் என்னை இம்மட்டும் உயர்த்தி மேன்மைப் படுத்தியுள்ளார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

- Sis. பரமேஸ்வரி, திருநெல்வேலி

---

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

**ஞாயிற்றுக்கிழமைதோறும் இறைவனை தொழுதுகொள்வதற்கு ஓர் ஒப்பற்ற வாய்ப்பு! எந்த விதமான பாகுபாடின்றி, விருப்பமுள்ள அனைவரும் பங்குபெறலாம்!**

## உங்களுக்காகவே இந்த விடுதலையின் ஆராதனை!

ஆராதனை நடைபெறும் நாள் : **அனைத்து ஞாயிற்றுகிழமைகள்**
ஆராதனை நடைபெறும் நேரம் : **காலை 9.30 முதல் 11.30 மணி வரை**
ஆராதனை நடைபெறும் இடம் : **டெலிவரன்ஸ் சர்ச்**
**அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்**
**10-வது குறுக்குத்தெரு, மேற்கு விஸ்தரிப்பு,**
**தில்லைநகர், திருச்சி - 620 018.**

அலைபேசி எண் : 99421 66066, தொலைபேசி எண் : 0431 - 2765386
e.mail : mydeliverancechurch@gmail.com
Website : www.mydeliverance.church

**சமூக வலைதளங்களில் டெலிவரன்ஸ் சர்ச்-ன் மூன்று விதமான நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது.**

- வியாழன் தோறும் மாலை 6.00 மணிக்கு திருமறை பாடம் (Bible Study)
- வெள்ளி தோறும் மாலை 6.00 மணிக்கு (Promise of the Week)
- ஞாயிறு தோறும் காலை 9.30 மணிக்கு விடுதலையின் ஆராதனை ஆன்-லைன் மூலமாக நேரலை நிகழ்ச்சி (Live Telecast) (வயதானவர்கள், வெளியூர்களில் இருப்பவர்கள், குழந்தைகள் மற்றும் அனைவருக்காகவும்)

Rev.Dr. A. ஜாஷ்வா **அவர்கள் வழங்கும் ஆசீர்வாதமான செய்திகள் மற்றும் இனிமையான பாடல்கள், ஆராதனைகள் அனைத்தையும்** YouTube Channel, Facebook Page **மற்றும் இணையதளத்திலும் பார்த்து ஆசீர்வாதம் பெறுங்கள்.**

Whatsapp No. 99446 66066
You tube Channel : My Deliverance Church
Face book Page : My Deliverance Church
Instagram : My Deliverance Church
Twitter : My Deliverance Church

ஆசீர்வாதமான தேவ செய்திகள் மற்றும் வல்லமையான ஜெபங்கள் அனைத்தும் உங்கள் வாழ்வில் பெரிய மாற்றத்தையும், விடுதலையையும், ஆசீர்வாதத்தையும் கட்டாயம் கொண்டு வரும்.

எனவே இன்றே @mydeliverancechurch
YouTube Channel ஐ subscribe பண்ணுங்கள்.
Facebook Page ஐ Like பண்ணுங்கள்
Instagram, Twitter ஐ Follow பண்ணுங்கள்

# அன்பரின் ஊழியம்

மலர் : 7 ◆ ஜனவரி 2021 ◆ இதழ் 1




## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் எனக்கு அருமையான அன்பரின் ஊழிய பத்திரிக்கை வாசகர்களே!

உங்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்! வருஷந்தோறும் அவருடைய கிருபை புதியதாய் இருக்கின்றது. கடந்த வருடம் முழுவதும் நாம் அனைவரும் கண்டது கண்ணீரும், சஞ்சலமும், இழப்பும், வேதனையும், மரணமும், கொடுமையுமே. 2020ம் ஆண்டு பெரிய சாதனை களின் ஆண்டாக அல்லாமல் மிகுந்த துக்கமான ஆண்டாக முடிந்து போனது. இருப்பினும் கிறிஸ்துவை பின்பற்றுகிற நம் அனைவருக்கும் ஓர் நம்பிக்கை உண்டு. அந்த நம்பிக்கை கிறிஸ்துவே. இயேசு கிறிஸ்துவே நம் நம்பிக்கையாக இருப்பதால் நாம் எதைக் குறித்தும் கலங்க வேண்டியது இல்லை. **கடந்த ஆண்டின் அனைத்து துயரங்களையும் அவர் நீக்கி இந்த ஆண்டிலே உங்கள் காயங்களை கட்டுவார். இழப்புகளை ஈடுகட்டி இந்த ஆண்டு இரட்டிப்பான ஆசீர்வாதங்களை உங்களுக்குக் கொடுப்பார்.** அநேக வாக்குத் தத்தங்களை நீங்கள் இந்த ஆண்டு படித்திருப் பீர்கள், கேட்டிருப்பீர்கள். குறிப்பாக கீழே கொடுக்கப்பட்ட மூன்று வாக்குத்தத்தங்கள் பங்காளர்களாகிய உங்களுக் கென்று தேவன் கொடுத்திருக்கிறார். அதை ஒவ்வொரு நாளும் வாசித்து தேவ ஆசீர்வாதங்களை உரிமையாக்கிக் கொள்ளுங்கள்.

### வாக்குத்தத்த வசனங்கள்

**உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்** - **ஏசாயா 44:3**b

**என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும். நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

**- யாத். 33:14**

**நான் காணாமல்போனதைத் தேடி, துரத்துண்டதைத் திரும்பக் கொண்டுவந்து, எலும்பு முறிந்ததைக் காயங்கட்டி, நசல் கொண்டதைத் திடப்படுத்துவேன்.**

**- எசேக்கியேல் 34:16**

மேலே காணும் இந்த வாக்குத்தத்தங்களின் செய்திகளை நீங்கள் நமது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும், யூடீயூப் சேனல்களிலும் கண்டு பயன்பெறலாம். இந்த வார்த்தைகளின்படியே தேவன் உங்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கை யிலும் அற்புதங்களையும், அதிசயங்களையும் செய்வாராக.

2021ஆம் ஆண்டிலே தேவன் உங்கள் வாழ்க்கையிலே நீங்கள் கேட்டுக் கொணட,


ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

| சந்தா விபரம் | | |
|---|---|---|
| இந்தியா : | ஆண்டு சந்தா ரூ.200/-. | ஆயுள் சந்தா ரூ.2,000/-. |
| வெளிநாடு : | ஆண்டு சந்தா ரூ.1,500/-. | ஆயுள் சந்தா ரூ.15,000/-. |



அவசர ஜெப உதவிக்குத் தொலைபேசி எண்கள்: **(0431) 2765386, 2765952, 2760603, 2760604, 2760605** (24 மணி நேரமும்)

**Telugu & Hindi** : 99445 36343, **Malayalam** : 94889 32937, **Kannada** : 90031 17205

e-mail: **info@mojindia.org** website: **www.mojworld.org & www.ministryofjesus.in**

முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

விரும்புகின்ற அனைத்து ஆசீர்வாதங்களையும் தந்து உங்களை ஆவிக்குரிய பிரகாரமாகவும், மாம்சப் பிரகாரமாகவும் திடப்படுத்தி உங்களை செழிக்கச் செய்வார். **ஒவ்வொரு ஆண்டும் கடந்து செல்ல செல்ல தேவனுடைய வருகை மிக மிக சமீபமாய் இருக்கிறது என்பதை நினைவிலே கொண்டு ஆயத்தப்படுங்கள், விழித்திருங்கள். மற்றவர் களையும் ஆயத்தப்படுத்துங்கள்.** பிசாசு கர்ஜிக்கிற சிங்கத்தை போல எவனை விழுங்கலாமோ என்று திரிந்து கொண்டு இருக்கிற காலத்தில் வீணாண தர்க்கங்களுக்கும், சிற்றின்பங்களுக்கும் உங்கள் ஆத்தும மீட்பை இழந்து போகாதிருங்கள்.

நாட்கள் செல்ல செல்ல கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களின் மத்தியிலே அநேக பிரிவுகளையும், நெருக்கங்களையும் நீங்கள் காண்பீர்கள். **கிறிஸ்துவின் திருச்சபை உள்ளிருந்தும், வெளியில் இருந்தும் அநேக போராட்டங்களை சந்திக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படும். இருப்பினும் திருச்சபை உடைக்கப் பட்டாலும், சிதறடிக்கப்பட்டாலும் தேவன் அதை நன்மையாக மாற்றித் தருவார்.** இந்த உடைக்கப் படுகிற நேரத்திலே சுவிசேஷம் அதிவேகமாய் பரவும் **(அப். 8:1-4).** நீங்களும் இந்த சுவிசேஷத்தை அநேகருக்கு கொண்டு செல்ல முயற்சி எடுங்கள், மற்றவர்களுக்கும் உதவுங்கள்.

இந்த மாதத்திலும், வருடம் முழுவதும் நடக்க இருக்கிற எல்லா கூட்டங்களுக்காகவும் ஜெபியுங்கள். அநேக கூட்டங்களை நடத்த முடியாத சூழ்நிலையில் இருக்கும் நமக்கு தேவன் புதிய வாசல்களை திறந்து கொடுக்கவும், ஊடகங்களின் மூலமாக அநேகரை தொடும் பாக்கியத்தை கர்த்தர் கொடுக்கவும் ஊக்கமாய் ஜெபியுங்கள். நாட்கள் பொல்லாதவைகளாக இருக்கிறபடியால் நாம் அசதியாக இருந்து ஆத்துமாக்களை இழந்து போகக்கூடாது. எப்படியாகிலும், எந்த வழியில் ஆகிலும் ஆத்துமாக்களை சந்திக்கும் பாரத்தோடு ஓடுவோம். அன்பரின் ஊழியத்தின் மூலமாய் இன்னும் அநேக லட்சக்கணக்கான ஆத்துமாக்கள் தொடப்படும் படியாக ஜெபியுங்கள்.

உங்கள் பகுதிகளிலே கூட்டங்கள் நடத்தவோ, அல்லது Zoom, GoogleMeet போன்ற ஆன்லைன் மீட்டிங் நடத்தவோ நீங்கள் முயற்சிப்பீர்கள் என்றால் அதிலேயும் உங்களோடு கூட இணைந்து நாங்கள் ஊழியம் செய்ய ஆயத்தமாய் இருக்கிறோம். அப்படிப்பட்டவர்கள் எங்களுடைய மின்னஞ்சல் மற்றும் தொலைபேசியில் தொடர்புகொள்ளுங்கள்.

**முக்கியமாக ஊழியத்தின் அனைத்து பிரிவுகளிலும் ஊழிய அர்ப்பணிப்போடு பணிபுரிய அநேக ஆட்கள் தேவைப்படுகிறார்கள். உங்கள் பிள்ளைகளோ, பேரப் பிள்ளைகளோ வேலை இழந்து தவிப்பார்கள் என்றால் அவர்களுடைய பயோடேட்டாவை எங்களது** info@mojindia.org **என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.** ஏற்ற ஊதியம் அவர்களுக்கு வழங்கப்படும். அதுமாத்திரமல்ல, ஊழியத்தில் பணியாற்றுகின்ற ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்வார்கள்.

**இந்த வருஷத்தில் நமது அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில்** Renovation **பணிகள் செய்ய வேண்டியிருக்கிறது.** அவைகளின் ஒரு பங்கை உங்கள் சார்பாக அல்லது உங்கள் குடும்பத்தின் சார்பாக ஏற்று இந்த மாபெரும் பணியை தாங்குங்கள். ரூ.20,000/- கொடுக்கக்

## அன்பரின் ஆறுதல் TV நிகழ்ச்சி நேரங்கள்

| நம்பிக்கை TELEVISION | தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள் | மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள் |
|---|---|---|
| திங்கள், செவ்வாய், புதன் காலை 6.30 – 7.00 | SUBHAVAARTHA TELEVISION சனி இரவு 8.00 – 8.30 | HARVEST TV சனி இரவு 07.30 – 08.00 |
| புதன் மதியம் 12.00 – 12.30 | ARADANA TV புதன் மாலை 6.00 – 6.30<br>சனி மதியம் 2.30 – 3.00 | Good News T.V. (GOODNEWS TELEVISION) வியாழக்கிழமை இரவு 8.30 – 9.00 |
| வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.30 – 9.00 | | |

கூடிய 100 பேர் இருந்தால் இந்த பணி சுலபமாக முடித்துவிடலாம். அதேபோல, தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் தயாரிக்க நவீன உபகரணங்கள் நமக்கு தேவைப்படுகின்றது. அவைகளை வாங்கவும் கர்த்தர் கிருபை செய்யும்படியாக ஜெபியுங்கள்.

நமது SJ Saves Trust மூலமாக செய்யப்படும் அனைத்து பணிகளும் இந்த வருடம் இன்னும் அதிகரிக்கப்பட ஜெபியுங்கள். உங்களின் மூலமாக தங்களுடைய ஏழ்மையில் ஆசீர்வாதங்களை பெறுகிற மக்கள் அநேகம் உண்டு. தொடர்ந்து தாங்குங்கள்.

அன்பரின் ஊழியம் மூலமாக நடைபெறும் அனைத்து ஊழியங்களும் ஆசீர்வதிக்கப்பட தேவன் இந்த ஆண்டு எங்கள் எல்லைகளை பெரிதாக்கவும் உங்களுடைய அன்றாட தனி ஜெபத்திலும், குடும்ப ஜெபத்திலும் நினைத்துக் கொள்ளுங்கள். உங்கள் பகுதிகளில் நடைபெறும் கூட்டங்களில் கலந்து கொள்ளுங்கள். பலத்த அற்புதங்களை பெற்றுச் செல்லுங்கள். தேவன் நிச்சயமாக உங்களுடைய வாழ்க்கையிலே நீங்கள் நினைத்து கூட பார்க்க முடியாத அற்புதங்களை செய்து உங்களை ஆசீர்வதிப்பார்.

## இதயம் தொட்ட எண்ணம்

தேவன் உங்களை
விரக்தியிலிருந்து நம்பிக்கைக்கும்,
இருளிலிருந்து ஒளிக்கும்,
இழப்பிலிருந்து இரட்டிப்பான
நன்மைக்கும் வழிநடத்துவாராக

May the Lord lead you from
Despair to Hope
Darkness to Light
And Loss to Double-fold blessing

கிறிஸ்துவின் பணியில்
**Dr. ஜேன் ஜாஷ்வா**

### ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புகிறவர்கள் கீழ்க்காணும் மூன்று வங்கிக் கணக்குகளில் அனுப்பலாம்

| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| Account No. | Account No. | Account No. |
| 10848469699 | 10848559426 | 10848474869 |

**State Bank of India, Cantonment, Trichy Main Branch**
**IFS Code : SBIN 0000930**

மேற்கண்ட வங்கியின் மூலமாக நீங்கள் காணிக்கை அனுப்பிய உடன் எங்களது Cell No : 95004 87061 என்ற எண்ணிற்கு காணிக்கை அனுப்பிய விவரத்தை கூறலாம். அல்லது SMS மூலம் தெரிவிக்கலாம்.

**உங்கள் காணிக்கைகளை அனுப்ப மேலும் ஒரு எளிய வழி**

← இந்த QR Code – ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து, அனைத்து பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் (Google pay, Paytm, PhonePe etc.,) மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக் கணக்குகளுக்கு காணிக்கை அனுப்பலாம்.



ஜனவரி 2021 வாக்குத்தத்த செய்தி

# அவரே சந்ததிகளுக்கெல்லாம் தேவன்

## (He is the God of All Generations)

Rev.Dr.A. ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் பிரியமான அன்பரின் ஊழிய பங்காளர்களுக்கும் மற்றும் பத்திரிக்கை வாசகர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த புது வருட நல்வாழ்த்துக்களை கூறிக்கொள்கிறேன்.

சென்ற 2020-ம் வருடம் முழுவதும் உங்களை கண்ணின் மணியைப் போல பாதுகாத்து வழி நடத்தின தேவாதி தேவனை நன்றியோடு ஸ்தோத்தரிக்கிறேன். கடந்த வருடத்திலே கொள்ளை நோயினால் உலகமெங்கும் உயிரிழப்புகளும், பொருளாதார நெருக்கடிகள் மற்றும் வேலை இல்லாத திண்டாட்டம் என பல பிரச்சனைகள் இருந்த போதும் கர்த்தர் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் மிகுந்த ஆச்சரியமாக பாதுகாத்து வழிநடத்தினதற்காக அவரை துதியுங்கள். அவரே புதிய வருடத்தை காணும் படியான பாக்கியத்தை தந்திருக்கிறார். நாம் ஆரம்பித்திருக்கிற இந்த 2021-ம் வருடம். சகல விதத்திலும் நன்மையான ஒரு வருடமாகவும், பாதுகாப்பு மற்றும் ஆசீர்வாதமான வருடமாகவும் கர்த்தர் அமைத்து தரும்படியாக உங்களுக்காக ஜெபிக்கிறேன்.

இப்புதிய ஆண்டின் வாக்குத்தத்த செய்தியின் மூலமாய் உங்களையெல்லாம் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த ஆண்டிற்கு கர்த்தர் உங்களுக்கு கொடுக்கின்ற வாக்குத்தத்த வசனம் **உன் சந்ததியின் மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன். ஏசாயா 44:3.** இந்த வாக்குத்தத்த வசனம் உங்களுக்கும் உங்கள் சந்ததிகளுக்கும் இந்த ஆண்டிலே மிகப்பெரிய ஆசீர்வாதத்தை கொண்டு வரும். நம்முடைய தேவன் தலைமுறைகளுக்கு தேவனாக இருக்கிறார். (He is the God of All Generations) அவர் தலைமுறை தலை முறையாக அடைக்கல மானவர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. **தேவரீர் தலைமுறை தலைமுறையாக எங்களுக்கு அடைக்கலமானவர். சங்.90:1-ல்** கூறுகிறபடி அவர் உங்களுக்கு மட்டுமல்ல, உங்கள் சந்ததிகளுக்கும் சந்தானங்களுக்கும் தேவனாயிருக்கிறார். இந்த வாக்குத்தத்தத்தில் இரண்டு பிரதானமான ஆசீர்வாதங்களை நாம் பார்க்கிறோம்.

**முதலாவதாக சந்ததியின் மேல் என் ஆவியை ஊற்றுவேன் என்றும், இரண்டாவதாக சந்தானத்தின் மேல் என் ஆசீர்வாதத்தை ஊற்றுவேன் என்றும் கூறப்பட்டிருக்கிறது.** இங்கு ஆசீர்வாதங்கள் இரண்டு விதமானது. ஆனால் அதை பெற்றுக்கொள்பவர் இரண்டு விதமானவர்கள் அல்ல. காரணம் **சந்ததி, சந்தானம்** என்கிற இரு வார்த்தைகளும் வெவ்வேறு அர்த்தங்களை உடையது அல்ல. ஒரே அர்த்தத்தை உடையது. இரண்டாவது சொல்லப்பட்ட சந்தானம் என்கிற வார்த்தை முதலாவது சொல்லப்பட்ட சந்ததி என்ற வார்த்தையின் பொருளோடு மீண்டும் திரும்ப கூறப்படுவதாகும். வார்த்தைகள்தான் வித்தியாசம். ஆனால் பொருள் ஒன்றே. இதைத்தான் ஆங்கிலத்தில் Synonymous, Parallelism என கூறுவர். எனவே இந்த ஆண்டு கர்த்தர் உங்கள் மீது மட்டுமல்ல. உங்கள் சந்ததியின் மேலும் மிகுந்த அக்கறை உள்ளவராக இருக்கிறார். உங்கள் சந்ததியின் மேலும்,

பிள்ளைகள் மேலும் கர்த்தர் தம் ஆவியையும், ஆசீர்வாதத்தையும் ஊற்றுவார். இதன் அடிப்படையில் சில குறிப்புக்களை இச்செய்தியின் வாயிலாக பகிர்ந்துக்கொள்ள இருக்கிறேன்.

## I. உன் சந்ததியின் மேல் என் ஆவியை ஊற்றுவேன் (I will Pour My Spirit on your Descendants)

என் ஆவியை ஊற்றுவேன் என்று சொல்லப் படுவது மிகுந்த விசேஷித்த ஒன்றாகும். ஏனென்றால் கர்த்தருடைய ஆவி மனுக்குலத்தின் மீது ஊற்றப்படுவது சாதாரண அனுபவம் அல்ல. அது ஒரு அசாதாரணமான அனுபவமாகும். அப்படிப்பட்ட ஒரு அனுபவத்தை இந்த ஆண்டு உங்கள் பிள்ளைகளுக்கு கொடுக்க கர்த்தர் வாஞ்சிக்கிறார். ஆதியிலே கர்த்தர் மனுஷனை மண்ணினாலே உருவாக்கி தம்முடைய ஆவியை அவன் நாசியிலே ஊதினார். அவன் உயிர் பெற்றான். **தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான். ஆதி.2:7** இதைத்தான் அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் **1கொரி.15:45-ல் முந்தின ஆதாம் உயிர் பெற்றான். பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கும் ஆவியானவர்** என்று தெளிவாகக் கூறினார். பக்தனாகிய யோபு கூட ஆவியானவரே என்னை உண்டாக்கினார். அவருடைய சுவாசமே எனக்கு உயிர் கொடுத்தது என்று தைரியமாக கூறினார். **தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார். சர்வ வல்லவருடைய சுவாசம் எனக்கு உயிர்கொடுத்தது யோபு 33:4**

இந்த கர்த்தருடைய ஆவியைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசி இவ்விதமாக சொல்லுகிறார். கர்த்தருடைய ஆவியானவர் உன்னதத்திலிருந்து நம் மேல் ஊற்றப்படுவார். **உன்னதத்திலிருந்து நம்மேல் ஆவி ஊற்றப்படுமட்டும் அப்படியே இருக்கும். ஏசாயா 32:15** இதைத்தான் மிகவும் தெள்ளத் தெளிவாக யோவேல் தீர்க்கதரிசி கூறுகிறார். **நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள். உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர் மேலும் ஊழியக்காரிகள்மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன். யோவேல் 2:28-29** இதே வார்த்தையைத்தான் **அப்போஸ்தலர் 2:18-யிலும்** வாசிக்கிறோம். என்னுடைய ஊழியக்காரர்மேலும், **என்னுடைய ஊழியக்காரிகள்மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்கதரிசனஞ் சொல்லுவார்கள்.**

பழைய ஏற்பாட்டு காலத்திலே என் ஆவியை உன் சந்ததி மேல் ஊற்றுவேன் என்று வாக்குரைத்த கர்த்தர் புதிய ஏற்பாட்டு காலத்தில் அதை தம்முடைய பரிசுத்த ஆவியினாலே பிறந்த இயேசுகிறிஸ்துவின் மூலமாக நிறைவேற்று கிறார். இயேசுவின் பிறப்பே ஆவியானவரால் தான். உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து சீஷர்கள் மேல் ஊதி பரிசுத்தஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார். **அவர்கள் மேல் ஊதி: பரிசுத்தஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள், யோவான் 20:22**

**லூக்கா 24:49 என் பிதா வாக்குத் தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார். அடுத்து நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளை யிட்டார். அப்போ.1:5.** இந்த வசனங்களை நாம் வாசிக்கும்பொழுது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரலோகத்திற்கு செல்வதற்கு முன்பாக தெளிவான ஒரு காரியத்தை சீஷர்களுக்கு சொல்லிவிட்டு சென்றார். பிதா வாக்குத்தத்தம் செய்து உன்னதத்திலிருந்து அனுப்பப்படும்

ஆவியை பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் எருசலேமில் காத்திருங்கள் என்றார். இயேசுவின் வார்த்தையை நம்பி சீஷர்கள் எருசலேமில் காத்திருந்தார்கள். **அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில்** வாசிக்கிறபடி 120 பேர் ஒருமனப்பட்டவர்களாய் மேல் வீட்டு அறையில் கூடியிருந்தார்கள். அப்பொழுது கர்த்தருடைய ஆவியானவர் அவர்கள் மேல் பலமாய் ஊற்றப் பட்டார். அங்கே கூடியிருந்த அனைவரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டார்கள். **அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு,... அப்போஸ்தலர் 2:4.**

பரிசுத்த ஆவியானவர் இந்த பூமியிலே ஊற்றப்பட்ட நாள்தான் (The Day of Pentecost) என்று அழைக்கப்படுகிறது. பெந்தேகோஸ்தே நாளிலே ஊற்றப்பட்ட அதே கர்த்தருடைய ஆவியானவரைத் தான் பரிசுத்த ஆவியானவர் என்றும் கூறுகிறோம். இந்த பரிசுத்த ஆவியானவர் அன்று மட்டுமல்ல இன்றும் ஒவ்வொருவர் மேலும் ஊற்றப்படுவதற்கு உண்மையுள்ளவராயிருக்கிறார். விசேஷமாக உங்கள் சந்ததி மேல் கர்த்தர் தம் ஆவியை அளவில்லாமல் ஊற்றி அவர்களை உயிர்ப்பிப்பார்.

## கர்த்தர் தம்முடைய ஆவியை உங்களுக்குள் ஊற்றும்பொழுது என்ன நடக்கும்?

### 1. நீங்கள் வல்லமையைப் பெற்றுக் கொள்வீர்கள் (You shall receive power)

**பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து... அப்போ. 1:8**

கர்த்தருடைய ஆவியானவர் ஊற்றப்படும் பொழுது ஒரு இனம் புரியாத அடக்கமுடியாத (uncontrol) சக்தி வாய்ந்த ஒரு வல்லமை, பெலன் இறங்கும். பழைய ஏற்பாட்டு காலத்திலே சிம்சோன் மீது கர்த்தருடைய ஆவியானவர் இறங்கினதாலே அவன் ஒரு பட்டணத்தின் வாசல் கதவை நிலையோடும், தாழ்ப்பாளோடும் சேர்த்து தூக்கும் வல்லமை பெற்றான். **... பட்டணத்து வாசல் கதவுகளையும் அதின் இரண்டு நிலைகளையும் பிடித்து, தாழ்ப்பாளோடேகூடப் பேர்த்து, தன் தோளின் மேல் வைத்து,... நியாதி. 16:3** யெப்தா மேல் காத்தருடைய ஆவியானவர் இறங்கினார்... அவன் அம்மோன் புத்திரரை முறியடிக்கும் வல்லமையைப் பெற்றான். **கர்த்தருடைய ஆவி யெப்தாவின்மேல் இறங்கினார்... கர்த்தர் அம்மோன் புத்திரரை அவன் கையில் ஒப்புக் கொடுத்தார். நியாதி. 11:29,32**

இவ்விதமாக யார் மீதெல்லாம் கர்த்தருடைய ஆவியானவர் ஊற்றப்படுகிறாரோ அவர்கள் கர்த்தருடைய வல்லமையையும் சேர்த்து பெற்றுக் கொள்கிறார்கள். கர்த்தருடைய வல்லமை சாதாரணமானது அல்ல. (God's power is not ordinary but Extraordinary and Super Natural) அது அசாதாரணமானதும் இயற்கைக்கு அப்பாற்பட்டதாகும். இப்படிப் பட்ட இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை உங்கள் சந்ததி மேல் ஊற்றுவதற்கு அவர் வாஞ்சையாயிருக்கிறார். இயேசுகிறிஸ்து கூட பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் தேவனால் நிரப்பப்பட்டார். **நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார். அப்போ 10:38.** அதுமட்டு மல்ல இயேசு கிறிஸ்து கர்த்தருடைய ஆவியின் வல்லமையினால் பல இடங்களுக்குச் சென்று ஊழியத்தை செய்தார். **இயேசு ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார். லூக்கா 4:14.** எனவே கர்த்தருடைய ஆவியானவரின் வல்லமை உலக பிரகாரமாக மட்டுமல்ல, தேவனுடைய பணிக்கும் நமக்கும் மிகுந்த அவசியமாக இருக்கிறது. அதனால் தான் அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் 1தெச. 1:5 கூறுகிறார். சுவிசேஷம் வெறும் வசனத்தோடு மாத்திரமல்ல. அது வல்லமையோடும் வரும் என்றார். **எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமை யோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் வந்தது.**

என் வசனம் ஒரு நாளும் வெறுமையாய் திரும்பாது என கர்த்தர் கூறுகிறார். **என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும். அது வெறு மையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச்செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும். (ஏசா.55:11)**

**இப்படிப்பட்ட வல்லமையை பெற்றுக் கொள்ள இளைஞர்களே நீங்கள் ஆயத்தமா? பெரியவர்களே உங்கள் சந்ததிகளை ஆயத்தப் படுத்துங்கள். கர்த்தர் தம்முடைய வல்லமையினால் பெரிய காரியங்களைச் செய்வார்.**

## 2. நீங்கள் உலகத்திற்கு சாட்சிகளாயிருப்பீர்கள். (You shall be witnesses to the world)

**பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து... பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச்சாட்சிகளாயிருப்பிர்கள். அப்போ.1:8**

கர்த்தருடைய ஆவி ஊற்றப்படும்பொழுது உங்களுக்குள்ளே சாட்சியின் வாழ்க்கை ஆரம்பமாகிறது. நீங்கள் மற்றவர்களுக்கு மாதிரிகளாக இருப்பீர்கள். உங்கள் சந்ததிகள் எடுத்துக்காட்டுகளாகவும் சான்றுகளாகவும் மாறுவார்கள். **சாட்சியில்லாத வாழ்க்கை ஒரு வெற்று வாழ்க்கையாக உயிரற்ற வாழ்க்கையாக இருக்கும்.** கர்த்தருடைய ஆவியானவர் **யூதா 24-ல்** சொல்லப்பட்டபடி கடைசிவரையும் வலுவாதபடி சாட்சியாக உங்களை நிலைநிறுத்த வல்லவர்.

கர்த்தருடைய பிள்ளைகளை அவர் தம்முடைய சாட்சியாக வைத்திருக்கிறார். **நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். லூக்கா 24:48** ஆதித் திருச்சபையில் வல்லமையாக பயன்படுத்தப்பட்ட அப்போஸ்தலர்கள் தைரியமாக சொன்னார்கள். இயேசுவை கொலை செய்தீர்கள். அதற்கு நாங்கள் சாட்சிகள். **ஜீவாதிபதியைக் கொலை செய்தீர்கள். அவரைத் தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார். அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். (அப்போ.3:15)** அதுமட்டுமல்லாது இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த தைரியமாய், பலமாய் சாட்சி கொடுத்தார்கள். **கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள். (அப்போ. 4:33)**

இயேசு உயிர்தெழுந்தார் என்கிற செய்தியை சாட்சியாக சொல்வதற்கு இந்த ஆவியானவரே நமக்கு தைரியத்தை கொடுக்கிறார். எனவே அன்புக்குரியவர்களே, **இந்த ஆவியானவரை நீங்களும் உங்கள் சந்ததிகளும் பெற்றுக்கொண்டு கடைசி வரையும் அவருக்கு சாட்சிகளாய் இருங்கள். அவரைக் குறித்து மற்றவர்களுக்கு சாட்சியாக சொல்லவும், அவர் உங்களை அழைக்கிறார்.** அவருடைய அழைப்பிற்கு கீழ்ப்படியும் வண்ணமாக உங்கள் மேல் ஊற்றுவேன் என்ற பரிசுத்தஆவியை இன்றே பெற்றுக் கொள்ளுங்கள்.

## 3. நீங்கள் வேறே இருதயத்தைப் பெறுவீர்கள். (you shall receive another heart)

கர்த்தருடைய ஆவியானவர் ஊற்றப்படும் பொழுது உங்களுக்குள்ளே இருக்கும் கல்லான இருதயம் எடுக்கப்பட்டு, சதையான இருதயம் வைக்கப்படுகிறது. **உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப் போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன். எசே.36:26**

சாமுவேல் தீர்க்கதரிசி தைலக்குப்பியை எடுத்து சவுலின் தலைமேல் வார்த்து அவனை அபிஷேகம் பண்ணி, கர்த்தருடைய ஆவி உன் மேல் இறங்குவார். அப்பொழுது நீ வேறு மனுஷனாவாய் என்று சவுலைப்பார்த்து சொன்னார். அதேப் போல சவுல், சாமுவேலை விட்டு புறப்படும்பொழுது கர்த்தர் அவனை ஆவியினால் நிரப்பினார். அவன் தீர்க்கதரிசனம்

உரைக்க ஆரம்பித்தது மட்டுமல்ல தேவன் அவனுக்கு வேறே இருதயத்தைக் கொடுத்தார். **அப்பொழுது, கர்த்தருடைய ஆவி உன்மேல் இறங்குவார். நீ அவர்களோடே கூடத் தீர்க்க தரிசனம் சொல்லி, வேறு மனுஷனாவாய். 1சாமு.10:6. தேவன் அவனுக்கு வேறே இருதயத்தைக் கொடுத்தார். 1 சாமு.10:9** இவ்விதமாக சவுல் கர்த்தரிடத்திலிருந்து வேறே இருதயத்தைப் பெற்றுக் கொண்டான்.

மகா திருக்குள்ளதும் கேடுள்ளதுமான பொல்லாத இருதயத்தை கர்த்தர் மாற்றி அவருக்கு உகந்த இருதயத்தை உங்களுக்குள்ளே வைக்கிறார். **தேவன் கொடுக்கிற இருதயம் மற்றவர்களுக்காக பாரப்பட்டு ஜெபிக்கக்கூடிய ஆத்ம வாஞ்சையுள்ளது. சுவிசேஷ ஊழியத்தை செய்ய தூண்டுவது. அதுமட்டு மல்ல கடைசி வரை தேவனுக்காக வைராக்கிய மாக வாழ உதவி செய்வது. இப்படிப்பட்ட சிறந்த இருதயத்தைதான் இந்த ஆண்டிலே உங்களுக்குள்ளும் உங்கள் சந்ததிக்குள்ளும் வைக்க இருக்கிறார். இதைப் பெற்றுக்கொள்ள நீங்கள் வாஞ்சிக்கிறீர்களா?**

## 4. நீங்கள் ஆவிக்குரிய கனி கொடுப்பீர்கள் (You shall bear spiritual fruits)

கர்த்தருடைய ஆவி ஊற்றப்படும்பொழுது நீங்கள் கனி கொடுக்கிறவர்களாக மாறுவீர்கள். அதைத்தான் **ஆவியின் கனி** என்று சொல்லுகிறோம். **ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம்,சாந்தம், இச்சையடக்கம். (கலா 5:22-23)** ஆவியின் கனியின் 9 விதமான குணாயதியங்கள் பற்றி இங்கே சொல்லப்பட்டிருக்கிறது.

தேவன் மீது அன்புள்ளவர்களாகவும், பிறரை நேசிப்பவர்களாகவும், அவருடைய மனந்திரும்புதலின் சந்தோஷத்தை பெற்றவர் களாகவும், உலகம் கொடுக்காத சமாதானத்தை இயேசுவிடம் மாத்திரமே பெற்றுக்கொள்ளவும் அவருடைய வருகைக்காக நீடிய பொறுமை யோடு காத்திருக்கவும், மற்றவர்களுக்கு தயவு செய்யவும், உங்களுடைய நற்குணங்களை வெளிப்படுத்தவும், விசுவாசத்தில் உறுதியாய் இருப்பதிலும், சாந்தத்தை தரித்து இச்சையடக்கத்தை கடைப்பிடிப்பவர்களாயும் இருக்க வேண்டும். மேற்சொல்லப்பட்ட இந்த 9 குணநலன்களும் உங்களிலே காணப்படுமாயின், நீங்கள் ஆவியின் கனிகளை பெற்றவர்களாய் இருப்பீர்கள். **கனிக்கொடுக்கிற வாழ்க்கை உங்களிலே காணப்படுவது மட்டுமன்றி அநேகரை கனி கொடுக்கிறவர்களாய் மாற்றுவீர்கள். கர்த்தருடைய ஆவியானவர் ஊற்றப்படும்பொழுது உங்களில் இந்த ஒன்பது குணங்களும் வாசம் பண்ணும். இந்த ஆவியானவரை பெற்றுக்கொண்டு தேவனுக் காக கனி கொடுக்க விரும்புகிறீர்களா?**

## 5. நீங்கள் ஆவியின் வரங்களை பெறுவீர்கள். (you shall receive spiritual gifts)

**1கொரிந்தியர் 12-ம் அதிகாரம் 4-ம் வசனம் முதல் 10-ம் வசனம் வரை** வாசிக்கும்பொழுது ஆவியின் வரங்களைக் குறித்தும், வரங்களின் செயல்பாட்டைக் குறித்தும், அப்போஸ்தலனாகிய பவுல் திட்டமும் தெளிவுமாக கூறியுள்ளார். நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் ஆவியின் வரங்களினால் அற்புத அடையாளங்கள் செய்ததை வேதத்தில் வாசிக்கிறோம். **நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். அப்போ.10:38**

**அப்போ.19:11-ல்** பவுலின் கைகளினாலே கர்த்தர் பலத்த அற்புதங்களை செய்தார் என்று வாசிக்கிறோம். இதேப்போலத் தான் ஆதித் திருச்சபையில் வாழ்ந்த அப்போஸ்தலர்கள் மூலமாக தேவன் அநேக அற்புதங்கள், அடையாளங்கள் செய்தார். இந்த அற்புதங்கள். அடையாளங்கள். தீர்க்க தரிசனங்கள், நவமான பாஷைகள் மற்றும்

வியாக்கியானங்கள் இன்னும் பல. இவை அனைத்தும் ஆவியின் வரங்களை குறிப்பதாகும். கர்த்தருடைய ஆவியானவர் ஒருவர் மீது ஊற்றப்பட்டால் மாத்திரமே இந்த ஆவியின் வரங்களை பெற்றுக்கொள்ளவும், செயல் படுத்தவும் முடியும்.

ஆவியின் வரங்கள் தனி மனிதனுடைய பேர் பிரஸ்தாபத்திற்கோ அல்லது சுய இலாபத்திற்கோ பெறுவது அல்ல. மாறாக இது முற்றிலும் தேவனுடைய நாம மகிமைக்காகவும் அநேக மக்கள் விடுதலை பெற்று ஆசீர்வதிக்கப் படும்படியாய் கொடுக்கப்படும் ஒரு அருட் கொடையாகும். நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கும் **இந்த கடைசி காலத்தில் விலையேறப்பெற்ற அவசியமான ஆவியின் வரங்களை நீங்கள் பெற்றுக்கொண்டு தேவனை மகிமைப் படுத்துங்கள்.** எனவே தான் **1கொரி.14:12-ல்** பவுல் தெளிவாக கூறுகிறார். நீங்களும் ஆவிக்குரிய வரங்களை நாடுங்கள். எனவே ஆவிக்குரிய வரத்தை நாடி அநேகருக்கு ஆசீர்வாதமாகுங்கள்.

## II. உன் சந்தானத்தின் மேல் என் ஆசீர்வாதத்தை ஊற்றுவேன்.

**(I will pour My Blessing on your Offspring)**

வாக்குத்தத்த வசனத்தில் இது இரண்டாவது பிரதானமான ஆசீர்வாதமாகும். கர்த்தர் தம்முடைய ஆசீர்வாதத்தை உங்கள் மீது மட்டுமல்ல. உங்கள் சந்ததி மீதும் அபரிமிதமாக ஊற்றுவேன் என்று வாக்கு கொடுத்திருக்கிறார். நம்முடைய தேவன் ஆசீர்வதிக்கிற தேவன் எனவே அவர் கட்டாயம் உங்களையும், உங்கள் சந்ததிகளையும் ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிப்பார். அவருடைய பிள்ளைகளை ஆசீர்வதிப்பது அவருக்கு மிகவும் பிரியம்.

**இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம் எண்.24:1.** அதுமட்டு மல்லாது அவருக்கு பயப்படுகிற பெரியவர்கள், வாலிபர்கள், சிறியவர்கள் மற்றும் யாராயிருந்தாலும் அவர்களையும் ஆசீர்வதிக் கிறார். **கர்த்தருக்குப் பயப்படுகிற பெரி யோரையும் சிறியோரையும் ஆசீர்வதிப்பார். சங் 115:13**

## கர்த்தருடைய ஆசீர்வாதம் எப்படிப்பட்டது?

### 1. வேதனை தராத ஆசீர்வாதம் (Blessing without pain)

**கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத் தைத் தரும், அதனோடே அவர் வேதனையைக் கூட்டார். நீதி.10:22** மனிதன் ஐசுவரியவானாய் மாறுவதற்கு பல குறுக்கு வழிகளை தேடிச் சென்று சம்பாதிக்கிறான். ஆனால் அதோடு கூட பலவிதமான துன்பங்களையும், வேதனை களையும் சம்பாதிக்கிறான். ஆனால் கர்த்தர் ஒரு மனிதனுக்கு ஆசீர்வாதம் கொடுக்கும்பொழுது வேதனை துன்பம் இல்லாதபடி பார்த்துக் கொள்வார்.

### 2. பரிபூரணமான ஆசீர்வாதம் (Abundant Blessing)

**உனக்குப் பரிபூரண நன்மை உண்டாகக் கட்டளையிடுவார். உபாகமம் 28:11.** தேவன் கொடுக்கும் ஆசீர்வாதம் மனிதன் கொடுப்பதை போல ஏதோ பிய்த்து பிய்த்து கொடுக்கும் ஆசீர்வாதமல்ல. மாறாக முழுமையாய் பரிபூரண மாய் கொடுக்கும் ஆசீர்வாதமாகும். அவர் தருகின்ற ஆசிர்வாதத்தில் குறைவுகள் இருக்காது. நிறைவான ஆசீர்வாதத்தை மட்டுமே அவருடைய பிள்ளைகளுக்கு கொடுப்பார். எனவேதான் உண்மையுள்ள மனுஷனுக்கு அவர் பரிபூரண ஆசீர்வாதத்தை கொடுப்பார் என்று வேதம் சொல்லுகிறது.

**உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான் நீதி.28:20 தேவனுக்கு உண்மையாய் இருக்க பழகுங்கள். அதனால் பரிபூரண ஆசீர்வாதத்தை பெற்று மகிழுவீர்கள்.**

### 3. பெருக்கத்தின் ஆசீர்வாதம்
### (Blessing of Multiplication)

தேவன் கொடுக்கும் ஆசீர்வாதம் ஏதோ தண்ணீர் தேங்கி நிற்கும் ஒரு குளம், குட்டை அல்ல. அது ஊறிக்கொண்டேயிருக்கும் ஆசீர்வாதமாகும். அவர் உங்களை பெருகச் செய்கிற தேவன். எனவே உங்கள் சந்ததிகளை அவர் பெருகச் செய்ய முடியும். **நீங்கள் இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும் ஆயிரமடங்கு அதிகமாகும்படி உங்கள் பிதாக் களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொல்லியபடியே உங்களை ஆசீர்வதிப்பாராக.** **உபா.1:11**

ஆயிரமடங்கு பெருகச்செய்வேன் என்று அவர் வாக்கு கொடுத்திருக்கிறார். வாக்கு கொடுத்தவர் நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார். அதைப் பெற்றுக் கொள்ள நீங்களும், உங்கள் சந்ததிகளும் தகுதிப் படுத்திக்கொள்ளுங்கள்.

வேதத்தின் அடிப்படையில் தேவன் தரும் இன்னும் அநேக ஆசீர்வாதங்களை சொல்லிக் கொண்டே போகலாம். இருப்பினும் உங்களுடைய வாழ்வின் சகலத்தையும் உள்ளடக்கும் இரண்டு முக்கிய **பேராசீர்வாதங் களை** குறிப்பிட விரும்புகிறேன். இதுதான் சீஷனாகிய பேதுரு கேட்ட கேள்விக்கு இயேசுகிறிஸ்து சொன்ன பதில். **இம்மையிலே, துன்பங்களோடேகூட நூறத்தனையாக, வீடு களையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங் களையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.** **மாற்கு 10:30**

### 1. இம்மைக்குரிய ஆசீர்வாதம்
### (Blessings in this Earth)

இம்மைக்குரிய ஆசீர்வாதம் என்பது உணவு, உடை, தங்குமிடம், சுகம், நல்லதொரு குடும்பம் தேவையான பொருளாதாரம் மற்றும் அவசியமான வசதிகள் அனைத்தையும் உள்ளடக்கியது. **முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.** **(மத்தேயு 6:33)** தேவ ராஜ்யத்தை முதலாவது தேடுங்கள், அப்பொழுது உலக ஆசீர்வாதம் அனைத்தையும் தானாக பெற்றுக் கொள்வீர்கள்.

### 2. மறுமைக்குரிய ஆசீர்வாதம்
### (Blessings in Eternity)

**பிலிப்பியர் 3:20-ல்** பவுல் கூறுகிறார். நம்முடைய குடியிருப்போ பரலோகத்தில் இருக்கிறது. பூமியிலே நாம் வாழும் வாழ்க்கை ஒரு தற்காலிகமானது. நமக்கு நித்திய ஜீவனை அளிப்பேன் என்று வாக்குக் கொடுத்திருக்கிறார். எனவே நித்திய ஜீவனான பரலோக வாழ்வை நாம் இழந்துவிடக் கூடாது. **யுகா யுகமாய் தேவனோடு வாழும் ஒரு உன்னத வாழ்க்கைத் தான் மறுமைக்குரிய ஆசீர்வாதமாகும்.** ஐசுவரியவானைப்போல மறுமைக்குரிய ஆசீாவாதத்தை இழந்து விடாதபடி லாசருவைப் போல் சுதந்தரித்துக்கொள்ள பிரயாசப்படுங்கள்.

### இரண்டு பிரதானமான ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்வதற்கு என்ன செய்ய வேண்டும்?

என் ஆவியையும், என் ஆசீர் வாதத்தையும் ஊற்றுவேன் என்று வாக்குக் கொடுத்தவர் வாக்கு மாறாதவர். அவர் கட்டாயம் தருவார். ஆனால் இன்றைய காலகட்டத்தில் அநேக பெற்றோர்கள் தங்கள் சந்ததிகள் துன்மார்க்கமாய் வாழ்கிறதை நினைத்து வேதனையும் துக்கமும் அடைகிறார்கள். ஏனென்றால் இளம் வயதிலே பீடி, சிகரெட், மது, போதை, விபச்சாரம் என இன்னும் பலவிதமான தவறான வழிகளில் சிக்கிக்கொண்டு வாழ்க்கையை வீணாக்கிக் கொண்டிருக்கும் இளைஞர்கள் ஏராளம் ஏராளம். இப்படியே இவர்கள் துன்மார்க்கமாய் வாழ்வார்களானால் கட்டாயம் இவர்கள் மீது கர்த்தர் தம்முடைய ஆவியையும், ஆசீர்வாதத்தையும் ஊற்ற இயலாது.

இந்த ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள பிள்ளைகள் **(சந்ததிகள்)** செய்ய வேண்டிய **4 எளிமையான காரியங்கள்:**

1. உங்கள் பாவ வாழ்க்கையிலிருந்து திரும்பி இயேசுவினிடத்தில் வாருங்கள்.
2. பாவ அறிக்கை செய்து மன்னிப்பை பெற்றுக் கொள்ளுங்கள்.
3. உண்மையான தாகத்தோடும் வாஞ்சையோடும் இந்த ஆசீர்வாதத்தை கர்த்தரிடம் கேளுங்கள்.
4. மேல் வீட்டறையில் கூடியிருந்த சீஷர்களைப் போல காத்திருந்து ஜெபியுங்கள்.

அப்பொழுது கர்த்தர் தம்முடைய ஆசீர் வாதங்களை உங்களுக்கு தருவார். அதே நேரத்தில் **பெற்றோர்களும்** உங்கள் பிள்ளைகள் இந்த பிரதான ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ள நீங்கள் செய்ய வேண்டிய **4 காரியங்கள்:**

1. நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல மாதிரியாக இருக்க வேண்டும்.
2. தொடர்ந்து நல்ல ஆலோசனைகளை உங்கள் பிள்ளைகளுக்கு தவறாமல் வழங்க வேண்டும்.
3. அவர்களை அனுதினமும் தேவ பக்திக்கேற்ற வழியில் கவனமாய் வளர்க்க வேண்டும்
4. உங்கள் பிள்ளைகளுக்காக ஊக்கமாக ஜெபிக்க வேண்டும்.

இவ்விதமாக நீங்கள் தவறாமல் ஜெபிக்கும் போது நிச்சயமாக கர்த்தர் உங்கள் சந்ததிகளின் மேல் தம்முடைய ஆவியையும் ஆசீர்வாதத்தையும் ஊற்றி ஆசீர்வதிப்பார். அது மட்டுமல்லாது சந்ததிகளுக்காக எதிர்பார்த்து கொண்டிருக்கும் தம்பதியினருக்கும் கர்த்தர் ஏற்ற வேளையில் சந்ததிகளை கொடுத்து ஆசீர்வதிப்பார்.

இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் அன்பான சகோதர, சகோதரிகளே, பங்காளர்களே, வாசகர்களே, இந்த ஆண்டிற்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தை முழுமையாக பெற்று அனுபவிக்க பெற்றோராகிய நீங்கள் செய்ய வேண்டியதை தவறாமல் செய்யுங்கள். அதேப்போல் பிள்ளைகளும் அவர்கள் செய்ய வேண்டியவற்றை கட்டாயம் செய்ய வேண்டும். இவ்விதமாக நீங்களும், பிள்ளைகளும் இணைந்து செயல்படும்பொழுது மெய்யாகவே இந்த ஆண்டிலே கர்த்தர் உங்கள் சந்ததிகள் மேல் தம்முடைய ஆவியையும், ஆசீர்வாதத்தையும் அபரிமிதமாய் ஊற்றி வாழ்நாளெல்லாம் மகிழ்ந்து களிகூறும்படி செய்வார். தேவ கிருபையும், தேவ பாதுகாப்பும், தேவ ஆசீர்வாதமும் இந்த ஆண்டு முழுவதும் உங்கள் அனைவரோடும் கூட நிறைவாய் இருப்பதாக...



# நமது ஊழிய பாதையில் கர்த்தர் செய்த அற்புத சாட்சிகளின் தொகுப்பு

## நல்ல வேலையும், விசாவும் கிடைக்கச் செய்த அற்புதர்



எனது மூத்த மகன் பெயர் ஜெபர்பால்சன். மகன் படித்து முடித்து சரியான வேலைக்காக காத்திருந் தான். இந்நிலையில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களது கூட்டத்தில் கலந்து கொண்டோம். தனி ஜெபவேளையில் பரிசுத்த ஆவியானவர் தீர்க்கதரிசனமாக சகோதரர் மூலம் **"உனக்கு நல்லதொரு கம்பெனியில் வேலை கிடைக்கும், வெளிநாட்டு விசாவும் கிடைக்கும், கர்த்தர் இதை செய்வார்"** என்று கூறினார்கள். இது எங்களுக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. கர்த்தர் நிச்சயம் செய்வார் என்று விசுவாசத்துடன் இருந் தோம். அதேபோல ஒருசில நாளில் ஆஸ்திரேலிய தேச கம்பெனி ஒன்றில் மகனுக்கு வேலைக்கான உத்திரவும், விசாவும் கிடைத்தது. நாங்கள் செய்த பொருத்தனையின்படி ஊழியத்திற்கு **Rs.10,000/-** காணிக்கை தருகின்றோம்.

**- திரு. செபாஸ்டின் ஞானமுத்து**

## 30 வருட சத்துருவின் போராட்டத்திலிருந்து விடுதலை



முப்பது வருடமாக சத்துருவின் போராட்டத்தினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன். ஒரு நாளும் தூக்கம் வராது. இதனால் பல சரீர உபாதை களுக்கு ஆளானேன். ஒவ்வொரு நாளும் கண்ணீரில் என் நாட்களை கழித்தேன். இந் நிலையில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களது கூட்டத்தில் கலந்துகொண்டேன். ஜெப வேளையில் சகோதரர் மூலம் கர்த்தர் என்னை பெயர் சொல்லி அழைத்தார். அந்த நாளிலிருந்து எனது போராட்டம் நீங்கியது. நன்கு தூங்க ஆரம்பித்தேன். எனது சரீர பெலவீனம் நீங்கியது. இப்பொழுது சந்தோஷத்துடன், சமாதானத்துடன் இருக்கிறேன். அற்புதம் செய்த தேவனை துதிக்கின்றேன்.

**- திரு. பெர்க்கின், லால்குடி**

## எதிர்ப்புகள் மத்தியில் நீட் தேர்வில் வெற்றி பெற்று MD படிக்க வாசல் திறந்த தேவன்!

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சாவூரில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களது குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்து கொண்டு மகளுடைய மேற் படிப்பிற்காக ஜெபித்துக் கொண்டேன். சகோதரர் மகளுக்காக ஜெபித்து **"கர்த்தர் நிச்சயம் மகளுக்கு நீட் தேர்வில் வெற்றியை தருவார், மேற்படிப்பில் சேரவும் கிருபை செய்வார்"** கலங்காதீர்கள்! என்று கூறினார்கள். M.D. படிப்பிற்கு மகளுக்கு பலவித தடைகள் இருந்தது. கிறிஸ்துவுக்குள் மகள் இருப்பதால் மகளை சுற்றி இருந்தவர்கள் அதிக பிரச்சனையை கொடுத்தார்கள். இவ்வளவு பிரச்சனையின் மத்தியில் NEET தேர்வில் மகள் தேர்ச்சி பெற்று மேற்படிப்பில் சிதம்பரம் மருத்துவ கல்லூரியில் சேர்ந்து தற்போது படித்து வருகிறாள். கர்த்தர் செய்த அற்புதத்திற்காக அவரை துதிக்கின் றோம்.



**- திருமதி. வாசுகி தமிழ்செல்வன், தஞ்சாவூர்**

## குறைவுகளை நீக்கி ஆசீர்வதித்த தேவன்!

நான் விஞ்ஞானியாக பணியாற்றி வருகின்றேன். ஆப்பிரிக்க தேசத்தில் ஒரு ஸ்தாபனத்தில் வேலை செய்து வந்தேன். பொருளாதார சீர்திருத்தம், கோவிட் 19 போன்ற உலகில் ஏற்பட்ட பிரச்சனைகளினால் எனது வேலையை இழந்து இந்தியா திரும்பி விட்டேன். வருமான மின்றி குடும்பம் மிகுந்த கஷ்டத் தில் தத்தளித்தது. இந்நிலையில் **Dr.ஆனந்த ஸ்திரா**



அவர்களை சந்தித்து ஜெபித்துக் கொண்டோம். ஐயா அவர்கள் எங்களுக்காக ஜெபித்து **"அடுத்த முறை நான் உங்களை பார்க்கும்போது நிரந்தரமான ஒரு வேலை கிடைத்திருக்கும், உங்கள் கஷ்ட நிலையை கர்த்தர் மாற்றுவார்"** என்று தீர்க்க தரிசனமாக கூறினார்கள். அவர்கள் சொன்னது போலவே எனக்கு நிரந்தரமான ஒரு வேலை கிடைத்தது. குடும்பமாக அயல்நாட்டிற்கு செல்வதற்கு கர்த்தர் வழிவாசலை ஏற்படுத்தி தந்துள்ளார். அதுமாத்திரமல்ல, கடந்த நாட்கள் முழுவதும் பலவித இக்கட்டுகளிலிருந்தும், என் மனைவிக்கு செய்யப்பட்ட அறுவை சிகிச்சை நேரங்களிலும் சர்வவல்ல தேவன் கூட இருந்து எங்களை அற்புதமாக நடத்தினார். **கர்த்தரை நம்புகிறவன் செழிப்பான்** என்ற வேத வார்த்தையின்படி செழிப்பை அருளின தேவனை முழு இருதயத்தோடு துதிக்கின்றோம். எங்களுக்காக ஜெபித்த சகோதரர் அவர்களுக்கும் நன்றியை தெரிவிக்கின்றோம்.

**- திரு. எட்வின்**

## அரசாங்கத்திலிருந்து கிடைக்க வேண்டிய பென்சன் விரைவில் கிடைக்க கிருபை செய்த தேவன்!



எனது தந்தை இராணுவத்தில் பணியாற்றினார். அவர் சமீபத்தில் உடல் நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார். அவருக்கு அரசாங்கத்திலிருந்து கொடுக்க வேண்டிய பென்சனுக்கு முறையாக இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் வழங்கினால் தான் எனது தாயாருக்கு அந்த உதவிகள் கிடைக்கும். இந்த சான்றிதழ்கள் வாங்க பல மாதங்கள் ஆகும். எப்படி இந்த காரியம் நடக்கும் என்று தெரியாமல் மிகவும் கலங்கி இருந்தோம். இந்நிலையில் **தேவ சமூகத்தில் பொருத்தனை செய்து ஜெபித்து முயற்சிகளை மேற்கொண்டோம். கர்த்தர் காரியங்களை வாய்க்கச் செய்தார். இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் ஆச்சரியமாக எங்களுக்கு மிக விரைவில் கிடைத்தது.** அதனை முறையாக அரசாங்கத்தில் கொடுத்தோம். இவை எல்லாம் கொடுத்தாலும் பென்சன் கிடைக்க ஒரு வருடத்திற்கு மேல் கூட அநேகருக்கு ஆகியுள்ளது. இந்நிலையில் **நாங்கள் சற்றும் எதிர்பாராத வண்ணம் ஒருசில மாதங்களிலேயே எனது தாயாருக்கு எனது தந்தையின் பென்சன் கிடைக்கும்படி கர்த்தர் மிகப்பெரிய அற்புதத்தை செய்தார்.** இது எங்களுக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. உண்மையான இருதயத்தோடு கர்த்தரிடத்தில் பொருத்தனை செய்யும் பொழுது அவர் அற்புதத்தை செய்கிறவர் என்பதை நாங்கள் உணர்ந்து, **எங்கள் பொருத்தனை காணிக்கையை அன்பரின் ஊழியத்திற்கு தருவதில் அதிக மகிழ்ச்சியடைகின்றோம்.** கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- Sis. ரெபெக்கா**

## பென்சன் விரைவில் கிடைக்க கிருபை செய்த தேவன்!



நான் அரசாங்கப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவன். எனக்கு பென்சன் வராமலேயே இருந்தது. இந்நிலையில் பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் காரியத்தை வாய்க்கச் செய்தார். நவம்பர் மாதத்திலிருந்து பென்சன் கிடைக்கும்படி அற்புதம் செய்தார். எனது பொருத்தனை காணிக்கையாக **Rs.10,000/-** காணிக்கை தருகின்றோம்.

**- திரு. செல்வநாயகம், தஞ்சாவூர்**

## நிலம் விற்பனையாகவும், புதிய வீடு வாங்கவும் உதவி செய்த அதிசயர்!



எங்களது நிலம் நீண்ட நாட்களாக விற்பனையாகாமல் இருந்தது. **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் மதுரை வந்தபொழுது அவர்களிடம் ஜெபித்துக் கொண்டோம். கர்த்தர் ஜெபத்தை கேட்டு அந்த நிலம் நல்ல விலைக்கு விற்பனையாகவும், மதுரையில் மிக முக்கியமான இடத்தில் ஒரு பெரிய வீட்டை சொந்தமாக வாங்கவும் கர்த்தர் கிருபை செய்தார். இந்த காரியம் நடக்குமா என்று பயந்த நேரத்தில் தேவன் மிகச் சுலபமாக காரியங்கள் நடந்தேற கிருபை செய்தார். அற்புதம் செய்த தேவனுக்கு மகிமை உண்டாவதாக!

**- திருமதி. அமிர்தம், மதுரை**

## பிள்ளைகளின் வாழ்வில் ஆசீர்வாதம், மனநிலை பாதிப்பிலிருந்து விடுதலை!

நாகர்கோவிலில் நடைபெறும் கூட்டங்களில் கலந்து கொண்ட நாள் முதல் கர்த்தர் எனது பிள்ளைகளை ஆசீர்வதித்து வருகிறார். எனக்கு பெரிய ஆபத்து வர இருந்தது. அந்த மரண ஆபத்தில் இருந்து கர்த்தர் என்னை அற்புதமாக பாதுகாத்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! எனது மனைவி மனநிலை பாதிப்பிற்குள்ளாகி இருந்தார்கள். **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களின் ஜெபத்திற்கு பிறகு இப்பொழுது அதிலிருந்து விடுதலையடைந்து வருகிறார்கள். கர்த்தர் செய்த அற்புதங்களுக்காக அவரை துதிக்கின்றேன்.

**- திரு.டேவிட் தங்கநாயகம், கன்னியாகுமரி**

## குழந்தை பாக்கியம்! படிப்பில் ஜெயம் அருளின அருள்நாதர்!

நாகர்கோவில் அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்துகொண்டு குழந்தை பாக்கியத்திற்காக Dr. **ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் ஜெபித்துக் கொண்டேன். சகோதரர் ஜெபித்து **"இந்த வருடம் முடியும் பொழுது கர்த்தரிடமிருந்து குழந்தை பாக்கியத்தின் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்வாய்"** என்று தீர்க்கதரிசனமாக கூறினார்கள். அதே போல ஆண்டின் முடிவில் நல்லமுறையில் குழந்தையை பெற்றெடுக்க கர்த்தர் கிருபை செய்தார். மேலும், நான் M.Phil., Degree பண்ணும்போது அன்பரின் ஊழிய ஜெப மையம் வந்து ஜெபித்து சென்றேன். கர்த்தர் படிப்பிலும் பெரிதான வெற்றியை கட்டளையிட்டார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- திருமதி. சுமி, நாகர்கோவில்**

## பிரிந்த குடும்பம் இணைந்தது

எனது சகோதரியும் அவரது கணவரும் கருத்து வேறுபாடு காரணமாக கடந்த மூன்று ஆண்டுகளாக பிரிந்து வாழ்ந்து வந்தனர். இவர்கள் இருவரும் குடும்பமாக இணைந்து வாழ வேண்டும் என்று Dr.**ஆனந்த ஸ்திரா** அவர்களுக்கு மின்னஞ்சல் மூலமாக ஜெப விண்ணப்பம் எழுதியிருந்தோம். சகோதரர் எனது சகோதரிக்காக ஜெபித்தார்கள். கர்த்தர் ஜெபத்தை கேட்டு பிரிந்தவர்கள் மீண்டும் குடும்பமாக இணைந்து வாழும்படி கிருபை செய்தார். கர்த்தர் செய்த அற்புதத்திற்காக அவரை துதிக்கின்றோம். எங்களது பொருத்தனை காணிக்கையும் ஊழியத்திற்கு தருகின்றோம்.

**- Dr. ஜெரால்டு**

## பக்கவாதத்திலிருந்து அற்புத விடுதலை!

எனக்கு மூளையில் இரத்தகசிவு ஏற்பட்டு, பக்கவாதம் உண்டாகி ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். எனது வாழ்க்கை என்ன ஆகுமோ இனி எழுந்து வர முடியுமா என்று கண்ணீர் வடித்தேன். இந்த நிலையில் அன்பரின் ஊழிய ஜெப மையத்தை தொடர்புகொண்டு ஜெபித்துக் கொண்டேன். ஜெபித்த ஜெப வீரர் **"கலங்காதீர்கள்! எல்லாம் வெறுமனே போகும் நீங்கள் ஆசீர்வாதமாய், சுகத்துடன் இருப்பீர்கள்"** என்றார்கள். அதன்படியே நான் ஆச்சரியப்படும் வண்ணமாக அற்புத சுகத்தை பெற்று மருத்துவ மனையிலிருந்து வீடு திரும்பினேன். அற்புத சுகம் தந்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! எனது பொருத்தனை காணிக்கை **Rs.2,500/-** தருகின்றேன்.

**- Sis. வனிதா, திட்டுவிளை**

## பிள்ளைகளின் படிப்பில் மேலான வெற்றி

எனது இரண்டாவது மகள் அருள்நிவேதா +2 வில் அதிக மதிப்பெண்களுடன் வெற்றி பெற்றதற்காக, எனது மகன் அஜித்சுதன் பத்தாம் வகுப்பில் அதிக மதிப்பெண்களுடன் வெற்றி பெற்று +1ல் Free Seat கிடைக்கும்படி கர்த்தர் கிருபை செய்தார். தேவனுக்கு கோடி ஸ்தோத்திரங்கள். எனது பொருத்தனை காணிக்கை **Rs.10,000/-** தருகின்றேன். கர்த்தருக்கே மகிமை! **- Mrs. மணிமேகலை, பட்டுக்கோட்டை**

## தடைகளை நீக்கிய சர்வ வல்லவர்

எனது திருமண காரியம் பலவருடங்களாக தடையாகவே இருந்தது. இதனால் நானும், என்னிமித்தம் என் குடும்பத்தினரும் மிகுந்த மனக்கவலையுடன் இருந்தோம். இந்நிலையில் எனது தாயார் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களுக்கு எனக்காக ஜெபிக்கும்படி கடிதம் எழுதினார்கள். சகோதரர் அவர்கள் எனக்காக **ஜெபித்து மிக விரைவில் குறிப்பிட்ட மாதத்தில் திருமணம் நடக்குமென தேதி மாதம் (18.5.2018) முதற்கொண்டு எழுதி**



**யிருந்தார்கள்.** அந்த கடிதத்தை நாங்கள் மிகப் பத்திரமாக லேமினேஷன் செய்து வைத்துள்ளோம். அவர்கள் **தீர்க்க தரிசனமாக கூறினபடி எனது திருமணம் அந்த மாதத்தில், அதே தேதியில் மிகுந்த ஆசீர்வாதத்துடன் நடைபெற கிருபை செய்தார்.** கர்த்தர் எனக்கு ஒரு குழந்தையையும் கொடுத்து ஆசீர்வதித்துள்ளார். அதுமாத்திரமல்ல, எனது அக்காவிற்கும் சகோதரர் கூறினபடியே திருமண காரியம் வாய்த்தது. கர்த்தர் செய்த அற்புதத்திற்காக அவருக்கு துதி, கனம், மகிமையை செலுத்துகின்றோம். எங்களது காணிக்கைகளால் ஊழியத்தை தாங்குகிறோம்.

**- திரு. சுரேஷ், சென்னை**

## கோவிட் - 19 நோயிலிருந்து அற்புத விடுதலை பெற்ற மிகப்பெரிய மருத்துவரின் சாட்சி



நானும் எனது மனைவியும் மருத்துவர்களாக (MBBS., M.D., F.DIAB, FICM, MIPHA, MAFPI) (M.D.,D.G.O.) பணியாற்றுகிறோம். எங்களுக்கு திருமணமாகி ஐந்து வருடங்களாக குழந்தை இல்லை. இதனால் மிகுந்த கவலையுடன் காணப்பட்டோம். அந்நிலையில் சென்னையில் Dr.**ஆனந்த ஸ்திரா** அவர்கள் நடத்தின குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்து கொண்டு குழந்தை பாக்கியத்திற்காக ஜெபித்துக் கொண்டோம். அப்பொழுது சகோதரர் **"நிச்சயமாய் கர்த்தர் உங்களுக்கு இரட்டிப்பான ஆசீர்வாதத்தை தருவார்"** என்று கூறினார். என்ன ஆச்சரியம் அதின்படியே என் மனைவி கர்ப்பமானாள். ஸ்கேன் எடுத்து பார்த்ததில் இரட்டை குழந்தைகள் இருந்ததை அறிந்தோம். இதனால் மிகுந்த மகிழ்ச்சியடைந்தோம். பொருத்தனை காணிக்கையாக சகோதரன் நடத்துகிற கிராமப்புற மருத்துவசேவை மையத்திற்கு (Rural Medical Clinic) எங்களால் இயன்ற காணிக்கையை அனுப்பினோம். இந்நிலையில் என் மனைவி ஆறு மாத கர்ப்பிணியாக இருக்கும்பொழுது திடீரென்று உலகம் முழுவதும் வாட்டி வதைத்த கோவிட் 19 நோய் என்னையும் தாக்கியது. இதனால் நான் மிகவும் கஷ்டப்பட்டேன். பிறகு என்னிடமிருந்து என் மனைவியை கோவிட் 19 தாக்கியது. நான் முதலாவது சுகமானேன். என் மனைவியோ கர்ப்பிணியாக இருந்தபடியால் கொரோனாவிற்குரிய தீவிரசிகிச்சை தரமுடியவில்லை. ஏனென்றால் அப்படி தந்தால் தாயும், குழந்தைகளும் இறந்து விடுவார்கள் அல்லது குழந்தைகள் மாத்திரம் இறந்துவிடும். மருத்துவர்களாகிய நாங்களே என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தோம்.

இந்நிலையில் Dr.**ஆனந்த ஸ்திரா** அவர்களுக்கு கர்த்தர் எங்கள் வியாதியின் நிலையை தரிசனமாக காண்பித்தார். சகோதரனும் கொஞ்சம் கூட சங்கடப்படாமல் இரவு நேரத்தில் எங்களை அழைத்து மரணப் பிடியிலிருந்த என் மனைவியையும், என் பிள்ளைகளையும் பாதுகாக்கும்படி ஊக்கமாய் ஜெபித்தார்கள். சர்வவல்ல தேவன் ஜெபத்தை கேட்டார். என் மனைவியையும், அன்பு குழந்தைகளையும், என்னையும் மரணத்தின் வாசலிலிருந்து தப்புவித்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! இன்று நாங்கள் அனைவரும் நல்ல சுகத்துடன் இருக்கிறோம். அற்புதம் செய்த தேவனுக்கு கோடாகோடி ஸ்தோத்திரம்!

**- Dr. வினோத் ஞானசெல்லையன், சென்னை**

## ஆவிக்குரிய வாழ்வில் முன்னேற்றம்



நான் பலவருடங்களாக மன அழுத்தத்தினால் மாத்திரை சாப்பிட்டு வருகின்றேன். எப்பொழுதும் தூங்கிக் கொண்டிருப்பேன். ஆவிக்குரிய வாழ்க்கையிலும் ஒரு முன்னேற்றம் இல்லாமல் அதிக கஷ்டப்பட்டு வந்தேன். இந்நிலையில் Dr.**ஆனந்த ஸ்திரா** அவர்கள் சென்னை வந்த சமயம் அவர்களை சந்தித்து எனது நிலையை கூறி ஜெபித்துக் கொண்டேன். கர்த்தருடைய வல்லமைஎன் மீது இறங்கியது. எனது மனஅழுத்தம் ஒவ்வொருநாளும் குறைய ஆரம்பித்தது. ஒரு சில வாரங்களில் முழு குணமடைந்தேன். ஆவிக்குரிய வாழ்க்கையிலும் நன்கு முன்னேறவும் கர்த்தர் கிருபை செய்துள்ளார். எனக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு. வீடு நல்லபடியாக கட்டி முடிக்கப்படவும், மகளுக்கு அழகிய குழந்தை பிறக்கவும் சர்வ வல்லதேவன் தயை செய்தார். **எல்லாவற்றுக்கும் மேலாக எனது கணவர் இரட்சிக்கப்படும்படி கர்த்தர் உதவினார்.** கர்த்தருக்கே ஸ்தோத்திரம்!

**- திருமதி. மேரி ஜாக்குலின், சென்னை**




**எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார் - 1 தீமோத்தேயு 2 : 4**

**ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்**
**- மத்தேயு 24 : 14**

**அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது - லூக்கா 24 : 47**

**தேவன் ஜாதிகள்மேல் அரசாளுகிறார்; தேவன் தமது பரிசுத்த சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறார்.**

**ஜனங்களின் பிரபுக்கள் ஆபிரகாமின் தேவனுடைய ஜனங்களாகச் சேர்க்கப்படுகிறார்கள்; பூமியின் கேடகங்கள் தேவனுடையவைகள்; அவர் மகா உன்னதமானவர் - சங்கீதம் 47 : 8,9**

**தேவனே, பூமியில் உம்முடைய வழியும், எல்லா ஜாதிகளுக்குள்ளும் உம்முடைய இரட்சணியமும் விளங்கும்படியாய்,**

**தேவரீர் எங்களுக்கு இரங்கி, எங்களை ஆசீர்வதித்து, உம்முடைய முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும் - சங்கீதம் 67 : 1,2**

கிறிஸ்துவுக்குள் எனக்கன்பான பங்காளர்களே!

கர்த்தருடைய சுவிசேஷத்தை உங்கள் ஜெபத்தாலும், தியாக உள்ளத்தோடு நீங்கள் செய்யும் அர்ப்பணிப்புகளாலும் தாங்குவதை நினைத்து தேவனை துதிக்கிறேன். நாம் அனைவரும் அறிந்தபடியும், நம்முடைய எதிர்பார்ப்புகளின்படியும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மிகவும் சமீபமாய் இருக்கிறது. நாம் வாழும் உலகம் நோவாவின் காலத்தைப் போலவும், லோத்தின் காலத்தை போலவும் போய் கொண்டிருக்கிறது. உலகத்தில் நடக்கும் ஒவ்வொரு காரியங்களை பார்க்கும்பொழுது நீதி எங்கே, உண்மை, மனதுருக்கம், இரக்கம் எங்கே என்று தான் கேட்க வேண்டியுள்ளது. இயேசு கிறிஸ்து ஒருவர் மாத்திரமே மனதுருக்கம் நிறைந்தவராகவும், மிகுந்த தேவ வல்லமையும், கிருபையும் பெற்றவராய் விளங்கினார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உலகத்தில் இருந்த பொழுது அவருக்கு எந்த விளம்பரமும் தேவைப் படவில்லை. அவர் செய்த மகத்தான அதிசயங்களை கண்டு உலக மக்கள் யாவரும் அவரை பின்பற்றினதாக பார்க்கிறோம். **(யோவான் 12:19)** கர்த்தர் தம்முடைய அபிஷேகத்தை மனுஷகுமாரனாகிய இயேசுவிற்கு அளவில்லாமல் கொடுத்திருந்தார் **(யோவான் 3:34).** எனவே, அவருடைய வார்த்தைகள் ஜீவனாகவும், ஆவியாகவும் புறப்பட்டது. இன்றும் இயேசு கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து தமக்கு ஊழியம் செய்கிறவர்களை பார்த்துக் கொண்டிருக்கிறார். அன்பரின் ஊழியத்தின் மூலம் செய்து வருகிற எல்லா ஆத்தும அறுவடைகளையும் பங்காளர்களாகிய உங்களுக்கும் தேவன் பகிர்ந்தளிப்பார். பவுல் சொல்கிறது போல, கிறிஸ்து இயேசுவில் உள்ள அன்பு என்னை அனுதினமும் நெருக்கி ஏவுகிறது. காடானாலும், மேடானாலும், கஷ்டமோ, நஷ்டமோ, துன்பமோ, துயரமோ எல்லாவற்றிலும் எந்நேரமும் அவரை பற்றி சொல்ல நாம் ஆயத்தமாய் இருக்கிறோம். கிறிஸ்துவின் அன்பின் ஊழியத்தை எந்த காரணத்தை கொண்டும் பணம் சம்பாதிக்க வேண்டும், பேர் பிரஸ்தாபம் வேண்டும் என்றும் நாம் ஒருபோதும் நினைக்கவில்லை. இந்த கடைசி காலத்தில் வாழுகிற அனைத்து உலக மக்களையும் நம்மால் முடிந்த அளவிற்கு கிறிஸ்து இயேசுவின் பரம ஒளியினிடத்திற்கு கொண்டு வர வேண்டும். கிறிஸ்துவின் சுவிசேஷம் தேவனுடைய ஒளியாக இருக்கிறது **(2 கொரி. 4:4).** அவருடைய ஊழியத்தை நாம் மனதார, சந்தோஷத்தோடு, அர்ப்பணிப்போடு செய்யும்பொழுது நாம் பெரிய அறுவடையை பார்க்கலாம். எந்த ஒரு கூட்டத்திற்கும் போவதற்கு முன்பு (தனி ஜெபம், குடும்ப ஆசீர்வாதக் கூட்டம், பெரிய நற்செய்திக் கூட்டம் அல்லது தொலைப்பேசி, வாட்ஸ்அப், யூட்யூப், தொலைக்காட்சி ஊழியமாக இருக்கலாம்) அந்த ஊழியத்தை செய்வதற்கு முன்னால் பல மணி நேரம் தேவ சமூகத்தில் காத்திருந்து நம்மை நாமே ஆராய்ந்து முழுவதும் தேவ சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்து செய்யும் பொழுது பெரிய அறுவடையை அங்கே காணலாம்.

ஆரம்ப கால ஊழியத்தில் நான் பல கிராமங்களுக்கு செல்வேன். கிராமங்களில் பட்டணங்களில் இருப்பது போல வசதிகள் இருக்காது. நான் மிகவும் பெலவீனமாக இருந்தபடியால் கிராமங்களில் தங்குமிடம் சுகாதாரமின்றி இருப்பதால் மிகவும் கஷ்டப்படுவேன். சாப்பாடு, தண்ணீர் போன்ற காரியங்களால் அடிக்கடி வயிறு கோளாறு, மயக்கம், காய்ச்சல் பலவகையான இம்சைகளை அனுபவிக்க

வேண்டியிருக்கும். சில சமயங்களில் தேவாலயத்தின் சார்பாக கூட்டங்கள் வைக்கும் பொழுது அங்கு இரண்டு பிரிவினர் இருப்பார்கள். ஒரு பிரிவினருக்கு ஒருவரை பிடிக்காது, இன்னொரு பிரிவினருக்கு இன்னொரு ஆளை பிடிக்கும். ஆலய செயலாளர், பொருளாளர் மாறும் பொழுது தங்களுக்கு எதிரான போதகர் என்று சொல்லி அவர்அழைத்த சுவிசேஷ கருக்கு சாப்பாடு கூட கொடுக்க மாட்டார்கள், சரியாக பேச மாட்டார்கள், பேசவும் அழைக்க மாட்டார்கள். கர்த்தர் சொன்னது போல, நம் வீட்டாரே நமக்கு சத்துருக்கள் ஆக உள்ளார்கள். எனினும் இன்பத்திலும், துன்பத்திலும், மரண ஆபத்துகளிலும், ஆத்துமாக்களை தேடி அலைந்து அவர்களிடம் அன்பாய் பேசி, அவர்களுக்கு இரட்சிப்பையும், சிலுவையின் மேன்மையையும் குறித்து சொல்வேன்.

ஒரு சமயம் நான் ஒரு ஊருக்கு சென்றிருந்தேன். அப்பொழுது எல்லாம் கூட்டங்கள் முடிந்தவுடனே தனி ஜெபத்திற்கு நிறைய பேர் வருவார்கள். கூட்டங்கள் மாலை வரை நடை பெறுகிறபடியால் அடுத்த நாள் மதிய நேரம் வரை ஜெபித்துவிட்டு மக்கள் செல்வார்கள். கூட்டம் முடிந்த அடுத்த நாளும் வாஞ்சை உள்ளவர்களின் வீடுகளை சந்திப்பதற்கும் வாய்ப்பு கிடைக்கும். அப்படியாகத் தான் இந்த கிராமத்திற்கு சென்றேன். அங்கே என்னை அழைத்த தலைவர் இந்த கிராமத்தில் எல்லா வீட்டிற்கும் செல்லலாம், குறிப்பிட்ட இரண்டு வீட்டிற்கு மாத்திரம் செல்ல வேண்டாம். ஏனென்றால் ஒரு வீட்டு தலைவர் மூன்று பேரை கொலை செய்து விட்டார். என்னை அழைத்தவர் என்னிடம் **"நீங்கள் அந்த வீட்டிற்கு சென்றாலும், நீங்கள் செய்கிற ஜெபம் ஒன்றும் கேட்கப்பட மாட்டாது. கொலைகளை செய்த தலைவர் இறந்துவிட்டாலும் கொலை செய்யப்பட்ட சாபம் அந்த வீட்டில் இருக்கிறது"** என்றும் கூறினார்.

**"இன்னொரு வீட்டில் உள்ளவர் கடவுளே இல்லை என்று சொல்கிறவர். எந்த ஒரு சமாதானமும் அந்த வீட்டில் இருக்காது. நன்றாக குடிப்பார், எல்லோரிடமும் சண்டையிடுவார். ஆலயத்தில் யார் பிரசங்கம் செய்தாலும் ஒன்று பிரசங்கிமார்களை கேலி செய்வார், இல்லை யென்றால் ஆலயத்திற்கு போகிறவர்களை தடை செய்வார். பயங்கர கோபக்காரர், யாரையும் எடுத்தவுடனே அடித்து விடுவார்"** என்று இன்னொரு வரை பற்றி கூறினார். நான் என்னை அழைத்தவரிடம் **"இன்று ஒரு இரவு நான் ஜெபத்தில் தரித்திருக்கி றேன், பிற்பாடு நான் ஊழியத்திற்கு வருகிறேன்"** என்று சொல்லிவிட்டு நான் இரவு முழுவதும் ஜெபம் செய்தேன். என்னை போகக் கூடாது என்று சொன்ன வீட்டிற்கு கர்த்தர் போகும்படி கூறினார். அதின்படியே முதலாவதாக அந்த கொலைகார சாபம் உள்ள வீட்டிற்கு சென்றேன். கர்த்தர் எனக்கு சொன்ன ஆலோசனைகளை அவர்களுக்கு சொன்னேன். அவர்கள் மிகவும் பணிவுடன் அதை கேட்டு அதின்படி நடப்போம் என்றார்கள். பிற்பாடு அந்த வீட்டில் பல வருடமாக திருமணமாகாத பிள்ளை களுக்காக ஜெபித்தேன். என்ன ஆச்சரியம் கர்த்தர் அந்த மூன்று பெண் பிள்ளைகளுக்கும் நல்ல இடத்தில் துரிதமாய் திருமணம் நடக்க கிருபை செய்தார். இன்றும் அவர்கள் நன்றாக இருக்கிறார்கள்.

அடுத்ததாக, கடவுள் இல்லை என்பவர் வீட்டிற்கு நான் மாத்திரம் தனியாக சென்றேன். அவ்வீட்டின் இல்லத்தரசி அப்பொழுது வீட்டை சுத்தம் செய்து கொண்டிருந்தார்கள். நான் வீட்டிற்குள் நுழைந்ததும் அவர்கள் மிகவும் திடுக்கிட்டார்கள். **"நீங்கள் இங்கு ஏதாவது ஜெபம் செய்தாலோ அல்லது பைபிள் படித்தாலோ என் கணவர் அரிவாளால் தான் பதில் தருவார்"** என்றார்கள். நான் அந்த இல்லதரசியிடம் **"அம்மா, உங்கள் கணவர் எங்கே"** என்று கேட்டேன். அவர்கள் **"வீட்டிற்கு பின்னால் உள்ள கிணற்றில் தண்ணீர் இரைத்து கொண்டிருக்கிறார்"** என்றார். நான் விட்ட பாடில்லை, நேராக அவர் தண்ணீர் இரைக்கும் இடத்திற்கே சென்று, தம்பி வாங்க **"இயேசு உங்களை நேசிக்கிறார்"** என்று கூறினேன். எனக்கே ஆச்சரியம்! அவர் எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை, கோபப் படவும் இல்லை. ஏனென்றால் கிறிஸ்துவின் அளவற்ற அபிஷேகம் எனக்குள் இருந்து செயல்பட்டது. ஆட்டுக்குட்டியை போல அவர் முதன்முறையாக முழங்கால்படியிட்டார். அவர்களுக்காக ஜெபித்தேன், இயேசு அவர்கள் மனதை தொட்டார். கல்லான மனம் உடைக்கப்பட்ட பாத்திரத்தை போல மாறியது. இயேசுவின் பாடுகளை குறித்து சொல்லி, சிறு ஜெபம் செய்துவிட்டு வந்தேன். கர்த்தர் அவரை பரிபூரணமாய் மாற்றினார். அவர் குடியை விட்டு மனந்திரும்பினார். கிராமத்தில் இருந்த அனைவரையும் ஆலயத்திற்கு கொண்டு வந்தார். அந்த ஊரில் பெரிய எழுப்புதல் உண்டாயிற்று.

வேறு ஒரு சமயம் நான் ஆந்திரா சென்ற பொழுது பெரிய கூட்டத்தின் மத்தியில் கர்த்தருடைய ஆவியானவர் சில மக்களை குறித்த வெளிப்பாடு களையும், தரிசனங்களையும் கொடுத்தார். அவ்வேளையில் அங்கு வந்த நன்கு படித்த சகோதரன் ராமுலு என்பவரை கர்த்தர் பேர் சொல்லி அழைத்தார். அவர் அங்கு வேடிக்கை பார்க்க வந்தவர். அவருக்கும் கிறிஸ்துவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அவர் குடும்பம் ஒரு வைராக்கியமான பிற வகுப்பை சார்ந்தது. இரண்டு முறை ஆவியானவர் அவரை பேர் சொல்லி அழைத்தார். அவர் உள்ளத்தில் இருக்கிற

அத்தனை காரியங்களையும் வெளிப்படுத்தினார். அவர் மிகவும் ஆச்சரியப்பட்டார். நான் அவரை குறித்து தீர்க்கதரிசனம் சொல்லும் பொழுது அவர் இயேசுவை சிலுவையில் தொங்குபவராக தரிசித்தார். அவரது கை, கால்கள் நடுங்கின, கண்ணீர் வடித்தார். இயேசுவுக்கு தம் வாழ்வை ஒப்புக்கொடுத்தார். பல எதிர்ப்புகள் அவருக்கு முதலில் வந்தது. ஆனால் பிற்பாடு அவருடைய குடும்பத்தினர் அனைவரும் இரட்சிப்படைந்தனர். ஆன்மீக சந்தோஷத்தை இயேசுவிடம் பெற்றுக்கொண்டனர். மனதுருக்கத்தின் ஆவியினால் ராமுலு நிரப்பப்பட்டார். **(ரோமர் 5:5)** இன்று அவர் அந்த பகுதியில் கிறிஸ்துவின் ஒளி விளக்காய் திகழ்கிறார்.

இப்படி பல சம்பவங்களை சொல்லிக் கொண்டே போகலாம். எந்த நிலையிலும், எப்படிப்பட்ட நேரத்திலும் இயேசுவின் அன்பை மற்றவர்களுக்கு சொல்வதில் நாம் தயக்கம் காட்ட கூடாது. ஏனென்றால் ஆத்தும மீட்பு மிகவும் விலையேறப்பெற்றது. **(சங்கீதம் 49:9)** பலவிதமான இருளில் இருக்கிற ஜனங்கள் தேவனின் ஒளியினிடத்திற்கு நாடி, தேடி, ஓடி வருகிறார்கள். எக்காரணத்தை முன்னிட்டும் நம்முடைய சுவிசேஷ கூட்டங்களில் மதங்களைப் பற்றி பேசவே மாட்டோம். இயேசுவின் அன்பைபற்றி, அவரது சிலுவையின் பாடுகளை பற்றி மாத்திரம் கூறுவோம். பல மணி நேரம் அவர் பாதத்தில் அமர்ந்து ஜெபித்து விட்டு செல்கிறபடியால் கர்த்தர் பெரிய காரியங்களை செய்கிறார். அவருடைய நாமத்திற்கே ஸ்தோத்திரம்! அநேக பொதுக் கூட்டங்களில் ஜெப வேளையில் முன்பாக வந்து தங்களை ஒப்புக்கொடுக்கிற ஜனங்கள் கிறிஸ்துவை அறியாதவர்களாக இருந்தும் தேவனின் அன்பின் வார்த்தையால் தொடப்படுகிறார்கள். கிறிஸ்துவுக்கு விரோதமான எதிரிகள் கூட கூட்டங்களில் கர்த்தர் செய்யும் அற்புதங்களை கண்டு வியப்புடன் எங்களை நோக்கி பார்க்கின்றனர்.

இப்படிப்பட்ட ஊழியம் வளர வேண்டும் என்றால் இந்த நவநாகரீக உலகத்தில் பலவகையான உபகரணங்களை நாம் பயன்படுத்த வேண்டும். தொலைக்காட்சி, வாட்ஸ்அப், youtube, மாதாந்திர பத்திரிக்கை, ஆறுதலான கடிதங்கள், தொலைப்பேசி, தனி நபர் ஜெபம் மற்றும் ஆலோசனைகள், இவை எல்லாவற்றையும் நாம் பயன்படுத்த கர்த்தர் உதவி செய்துள்ளார். எனவே நாம் நம்மை குறித்து பேசாமல் இயேசுவின் மனதுருக்கத்தை பற்றியும், நமக்காக சிலுவையில் அறையுண்ட அவருடைய தியாகத்தை பற்றியும், அவர் தரும் சமாதானத்தை பற்றியும் கூறும்பொழுது ஜனங்கள் உண்மையாகவே தேவனிடம் திருப்பப்படுகிறார்கள். குடும்பத்திற்குள் இதனால் எந்தவிதமான ஒரு தகராறும், எதிர்ப்பும் வராது. நாம் ஞானத்தோடு ஊழியம் செய்யும் பொழுது கர்த்தர் நிச்சயமாய் அநேக ஜனங்களின் கண்ணீரை துடைக்க நம்மை பயன்படுத்துவார்.

இந்த ஆண்டின் முதல் மாதத்தில் நாம் விரைவாக சுவிசேஷத்தை அறிவிப்போம். இந்த மாபெரும் அறுவடைக்காக உருக்கமாய் ஜெபிப்போம். உங்களால் இயன்ற காணிக்கைகளை கொடுத்து ஊழியத்தை ஆதரியுங்கள்.

## அறுவடைப் பங்காளர்கள்

| | | |
|---|---|---|
| 1. | பெயர் | |
| 2. | பங்காளர் எண் | |
| 3. | முகவரி | |
| | | |
| | | |
| 4. | அலைபேசி எண் | |
| 5. | வாட்ஸ்ஆப் எண் | |
| 6. | மின்னஞ்சல் | |
| 7. | நன்கொடை | மாதந்தோறும்<br>ரூ.1,000/- ☐ ரூ.2,000/- ☐ அதற்கு மேல் ரூ.................... |



# என் சமூகம் உனக்கு முன்பாக செல்லும்

Dr. ஆனந்த ஸ்திரா

**உம்முடைய கண்களில் இப்பொழுது எனக்குக் கிருபை கிடைத்ததானால் நான் உம்மை அறிவதற்கும், உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைப்பதற்கும், உம்முடைய வழியை எனக்கு அறிவியும்; இந்த ஜாதி உம்முடைய ஜனமென்று நினைத்தருளும் என்றான்.**
**அதற்கு அவர்: என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றார்.**
**அப்பொழுது அவன் அவரை நோக்கி: உம்முடைய சமூகம் என்னோடே கூடச் செல்லாமற்போனால், எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டு போகாதிரும் - யாத்திராகமம் 33:13-15**
**வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்; உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது. - சங்கீதம் 65: 11**
**நம்பிக்கையுடைய சிறைகளே, அரணுக்குத் திரும்புங்கள்; இரட்டிப்பான நன்மையைத் தருவேன், இன்றைக்கே தருவேன் - சகரியா 9:12**
**தேசமே, பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார் - யோவேல் 2:21**

*கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர, சகோதரிகளே!*

உங்கள் அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த ஆசீர்வாதமான, பிரகாசமான இனிதான புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

கர்த்தருடைய ஆவியானவர் மேலே கொடுத்த வாக்குத்தத்தமான வசனங்களை இந்த ஆண்டின் முதல் நாளில் கர்த்தருடைய ஆசீர்வாதத்தை தேடி வரும் உங்களுக்கு மிகவும் பிரயோஜனமுள்ளதாக இருக்க எனக்குக் கொடுத்தார். ஒவ்வொரு வருடமும் கடந்து போகும்பொழுது நம் மனதில் வைக்க வேண்டிய இரண்டு காரியம் என்னவென்றால், முதலாவது, கர்த்தருடைய இரண்டாம் வருகை மகா சமீபம்! இரண்டாவது, நாம் இன்னும் கர்த்தரை அறிவதற்கும், கர்த்தரோடு நெருங்கி பழகுவதற்கும் நமக்கு இன்னொரு ஆண்டு நம்முடைய வாழ்க்கையில் கூட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய காலங்கள் அவர் கரத்தில் இருக்கிறது, **(சங்கீதம் 31:15a)** நம்முடைய சுவாசத்தை அவர் தமது கரங்களில் வைத்திருக்கிறார், **(தானியேல் 5:23)** நம் வாழ்க்கையில் வருடங்கள் கூட்டி கொடுக்கப்பட, கொடுக்கப்பட நாம் இன்னும் அதிகமாய் தேவனை தேடவும், அவர் வேதத்தின் ஆழத்தை அறிந்து கொள்ளவும் **(நீதி. 9:10; சங்கீதம் 119:130)** அவர் கொடுத்த நல்ல தருணம் என்பதை நாம் உணர வேண்டும்.

தேவனுடைய தாசனாகிய மோசே மிகுந்த அழகுள்ளவனாக இருந்தான். தண்ணீரில் விடப்பட்ட அவனை கர்த்தர் அற்புதமாக மீட்டு பார்வோன் அரண்மனையில் சகல கலைகளையும் நன்கு கற்று மிக உயர்ந்த பதவியில் அவனை வைத்தார். பிற்பாடு அவன் வனாந்தரத்திற்கு துரத்தப்பட்ட பொழுது தேவனை தரிசிக்கிறான். அவருடைய கட்டளையின்படி உலகில் யாரும் செய்யாத மிகப்பெரிய அற்புதங்களை செய்து 400 வருடம் அடிமைகளாக இருந்த சுமார் 22 இலட்சம் மக்களை விடுவித்து சமுத்திரத்தை பிளந்து அதை வெட்டாந்தரையாக்கி, அவர்களை கடக்கச் செய்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தில் யோர்தான் நதி வரைக்கும் தன்னுடைய தள்ளாடும் கடைசி 40 வருடத்தில் (80 வயது முதல் 120 வரை) பத்திரமாய் வழி நடத்தினார். ஒவ்வொரு நாளும் **"ஒரு சிநேகிதன் இன்னொரு சிநேகிதனோடு பேசுவது போல மோசே தேவனோடு பேசினான்". (யாத். 33:11; எண். 12:8)** அவனுக்கும் தேவனுக்கும் உள்ள தொடர்பு மிக ஆச்சரியமானது, அற்புதமானது, மிகவும் ஆழமானது. அப்படிப்பட்ட மோசேயே, தேவாதி தேவனை நோக்கி கண்ணீரோடு **"உம்முடைய சமூகம் எனக்கு முன் செல்ல வேண்டும்; உம்முடைய கிருபை எனக்கு அதிகமாய் வேண்டும்; அதன் மூலமாய் நான் உம்மை இன்னும் அறிய வேண்டும், நீர் என்னை நடத்தப் போகிற வழியை எனக்கு காண்பியும், அறிவியும்"** என்று கெஞ்சி பிரார்த்தனை செய்கின்றான்.

ஆம், அன்பானவர்களே! சற்று ஆழமாய் யோசியுங்கள். தேவனோடு கூட நெருங்கி பழகி மிக மிக வல்லமையான காரியங்களை கர்த்தருடைய நாமத்தில் செய்த **"மகா பெரிய தீர்க்கதரிசியாகிய மோசேயே தேவனை இன்னும் அறிய வேண்டும், அவருடைய கிருபை இன்னும் வேண்டும், அவருடைய சமூகம் தனக்கு முன் செல்ல வேண்டும்"** என்று கேட்கும் பொழுது சாதாரண மக்களாகிய நாம் எவ்வளவாய் கேட்க வேண்டும். ஆம்! இந்த ஆண்டு எப்படி இருக்கப் போகிறது, என்ன நடக்கப் போகிறது என்று நமக்குள்ளேயே யோசித்து, குழம்புவதற்கு பதிலாக ஒவ்வொரு நாளும் **"அன்புள்ள கர்த்தாவே! உம்முடைய வழியில் என்னை நடத்தும், உம்முடைய சமூகம் எனக்கு முன்**

**செல்லட்டும்"** என்று நாம் அவரை நோக்கி மன்றாடுவோம். அப்பொழுது கர்த்தர் நிச்சயமாய் தம்முடைய மகிமையின் பிரசன்னத்தால் ஒவ்வொரு நாளும் அவரை தேடும்பொழுது உங்களை நிரப்பி, எல்லா தீமைக்கும் விலக்கி காத்து, எப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும் இந்த வருடத்தை நமக்கு நன்மையாக முடியப் பண்ணி (இரண்டாம் வருகை தாமதிக்குமானால்) கடந்த காலத்தை பார்க்கிலும் இரட்டிப்பாய் நம்மை ஆசீர்வதித்து, எல்லா இக்கட்டுகளுக்கும், தொடர்ந்து துன்பப்படுத்தின பாவங்கள், சாபங்கள், நோய்கள், கடன் பாரங்கள், வேலையின்மை, சமாதானமின்மை, பணக்கஷ்டம், இரட்சிக்கப்படாத தன்மை, அபிஷேகமற்ற வாழ்க்கை இவை எல்லாவற்றிலுமிருந்து விடுவித்து, வெற்றியை தந்து, சந்தோஷமாய், அவர் சமூகத்தில் களிகூரும்படி செய்வார் **(சங்கீதம் 16:11; நீதி. 8:30).**

நாம் வடித்த கண்ணீருக்கு மற்றும் உறுதியான மன்றாட்டு ஜெபங்களுக்கு, உபவாச ஜெபங்களுக்கு பதில் தந்து நம்மை சுகமாய் இருக்கப் பண்ணுவார். நம்முடைய எல்லாவிதமான மனஅழுத்தம், இக்கட்டான நிலைகள், சுமக்க முடியாத பாரங்கள், நொறுங்கிப் போகும் நிலையை மாற்றி நம்மை இளைப்பாற செய்வார். கர்த்தர் தாம் சொன்னபடியே, கூடார வாசலில் மோசே ஜெபித்து முடிக்கும் வரைக்கும் அமைதியாக காத்திருந்த நூனின் குமாரனாகிய யோசுவாவை இஸரவேலருக்கு மோசேக்கு பின்னர் தலைவனாக்கி வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு க்ஷேமமாய் அவர்கள் செல்ல கிருபை செய்து, மோசேக்கு நிரந்தரமான இளைப்பாறுதலைத் தந்தார் அல்லவா! இதேபோலத்தான் உங்களையும் உங்கள் வழிகளில் இருக்கிற எல்லா இடறல்களையும் எடுத்துப்போட்டு உங்களை தம்முடைய உயர்ந்த வழியில், ஆசீர்வாதமான மகிமையின் வழியில் நடத்துவார், பாதுகாப்பார். கர்த்தர் உங்களுக்கு முன்பாக போவார்! உங்கள் கஷ்டங்கள், தீராத வியாதிகள் எல்லாவற்றிலுமிருந்து உங்களுக்கு விடுதலை தந்து இளைப்பாறுதலைத் தருவார் **(உபாகமம் 31:6,8; ஏசாயா 55:8,9).**

நெருக்கங்களும், போராட்டங்களும், அழிவுகளும், எதிர்பாராத மாற்றங்களும் உலகம் முழுவதிலும் நடைபெற்றாலும் அதைக்குறித்து கலங்காதீர்கள். இவையனைத்தும் கர்த்தருடைய வருகை சமீபமாய் இருக்கிறது என்பதை உணர்த்துகிறது. கர்த்தர் உங்களை தமது செட்டைகளில் மறைத்து எல்லா தீமைக்கும் விலக்கிக் காப்பார். அவருடைய அன்புக்கு விரோதமாக எழும்பும் சக்திகளை, சத்துருக்களை முறியடித்து, தேசங்களில் பெரிய காரியங்களை நடப்பித்து தாம் ஒருவரே ஏகசக்ராதிபதி என்பதை நிரூபிப்பார்.

**நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.**

**ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக - 1 கொரி. 15: 57, 58**

இந்த செய்தியின் முழு தொடர்ச்சியை நீங்கள் எமது You tube Channel மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.


## உடனடி தேவை

இந்த நாட்களில் அநேகர் வேலையிழந்து தவிப்பதை பார்க்கிறோம். அநேகருடைய வாழ்க்கை எதிர்பாராத சூழ்நிலையால் அவர்களை மிகுந்த சோர்விற்கு கொண்டு போயுள்ளது. இந்நிலையில் நீங்களோ அல்லது உங்களுக்குத் தெரிந்தவர்கள் யாராவது வேலையில்லாமல் இருப்பார்கள் என்றால் அல்லது கர்த்தருக்கு பணி செய்ய முழு மனதோடு விரும்பினால் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

1. Tally Erp 9 தெரிந்த Accountants
2. கம்ப்யூட்டரில் தமிழ் மற்றும் ஆங்கிலம் விரைவாக டைப்பிங் பண்ணத் தெரிந்த Data Entry Operators
3. அனுபவம் உள்ள கேமரா மேன்கள்
4. Adobe premiere pro தெரிந்த வீடியோ எடிட்டர்ஸ்
5. அனுபவம் உள்ள ஓட்டுநர்கள்
6. இரட்சிக்கப்பட்ட ஜெப வாஞ்சையுள்ள ஜெப வீரர்கள்
7. House keepers

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி**

**Ministry of Jesus, 10th Cross West Extn., Thillai Nagar, Trichy 620 018**
**Mob : 94888 45628 E.Mail: info@mojindia.org**



# S J SAVES TRUST

## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள்; அந்நியரை உபசரிக்க நாடுங்கள் - ரோமர் 12:13

பலியையல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்... - மத்தேயு 12:7

தயாளகுணமுள்ளவன் தயாளமானவைகளை யோசிக்கிறான், தயாளமானவைகளிலே நிலைத்தும் இருக்கிறான் - ஏசாயா 32:8

சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்.

கர்த்தர் அவனைப் பாதுகாத்து அவனை உயிரோடே வைப்பார்; பூமியில் அவன் பாக்கியவானாயிருப்பான்; அவன் சத்துருக்களின் இஷ்டத்திற்கு நீர் அவனை ஒப்புக்கொடீர் - சங்கீதம் 41:1,2

அன்புள்ள தேவ பிள்ளைகளே!

நாம் வாழும் உலகில் நூற்றுக்கு 30 சதவிகிதம் சிறுபிள்ளைகள் சரியான உணவின்றி தவிக்கின்றனர். நூற்றுக்கு 35 சதவிகிதம் சிறு பெண் பிள்ளைகள் பலவிதங்களில் கஷ்டங்களையும், வேதனைகளையும், துன்பங்களையும் அனுபவிக்கின்றனர். அநேகர் இன்னும் வறுமை கோட்டிற்குக் கீழாகவே இருக்கின்றனர். இதற்கு பல காரணங்கள் உண்டு. "தேசத்திலே எளியவர்கள் இல்லாதிருப்பதில்லை ஆகையால் உன் தேசத்திலே சிறுமைப்பட்டவனும் எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறக்கவேண்டும் என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்" (உபாகமம் 15:11) என பரிசுத்த வேதாகமம் திட்டமும் தெளிவுமாக கூறுகிறது. இப்படிப்பட்ட அநேக சூது, வாது அறியாத, நன்மை தீமை தெரியாத ஏழை பிள்ளைகள் அனுபவிக்கும் கொடுமைக்கு காரணம் முதலாவது அவர்களது அருகில் இருப்பவர்கள். பிள்ளைகளை கவனிக்காமல் விடும்பொழுது எந்தவிதமான கட்டுப்பாடின்றி அவர்கள் வளருகிறார்கள். கவனிக்க வேண்டியவர்களே முன்மாதிரியாக இல்லாதபடியால் இப்பிள்ளைகள் காலம் செல்ல செல்ல மோசமான வாழ்க்கை வாழ தள்ளப்படுகிறார்கள். சில இடங்களில் பெற்றோர்கள் அரசு தரும் ரேஷன் பொருட்களையும் கூட விற்று விடுகிறார்கள். தாங்கள் கஷ்டப்பட்டு உழைத்து கிடைக்கும் பணத்தை மதுபானத்திற்கு செலவழித்து அலங்கோல கோலத்தோடு வீட்டில் படுத்துவிடுகிறார்கள். கணவன் மாத்திரம் வேலைக்கு வந்தால் வீட்டில் இருக்கும் மனைவி படாதபாடுபடுகிறாள். அடிகளும், உதைகளும் தான் அவளுக்கு கிடைக்கும் பலன். சாப்பாட்டிற்கு வழியின்றி அவளும் வேலைக்கு செல்கிறாள். முடிவில் அவளும் மதுபானத்திற்கு அடிமையாகிறாள்.

இரண்டாவது காரணம் சூழ்நிலைகள். வேலையில்லாதபடியால் அநேக எளிமையான பெற்றோர் தங்களைத் தாங்களே தற்கொலை செய்து கொள்கின்றனர். வேறு சிலர் பாவ வழியில் தங்கள் பிள்ளைகளை பலாத்காரமாய் உட்படுத்துகிறார்கள். அதாவது 11 வயது அதற்கு மேற்பட்ட வயது பிள்ளை களை பாலியல் கொடுமைகளுக்கு ஆளாக்குகிறார்கள். பிள்ளைகளும் கிடைக்கும் பணத்தை குடிக்கு பயன்படுத்துகிறார்கள். இந்த கோவிட்-19 கொள்ளை நோய் காலத்தில் அநேக பிள்ளைகள் பள்ளிக்கு போக முடியாதபடி வீட்டிலேயே இருப்பதால் அவர்கள் மனநிலை பாதிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட செய்தி ஒன்றை நான் படித்தேன். அதில் இந்த கொரோனாவால் சுமார் ஏழாயிரம் பள்ளிக்கூட மாணவிகள் தங்கள் சொந்த குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மூலமாக பாலியல் ரீதியான செயல்களுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இதிலும் கொடுமை இப்படிப்பட்ட ஏழை பிள்ளைகள் கர்ப்பமாகியும் உள்ளார்கள். தாங்கள் கர்ப்பமானது வெளியே

தெரியாதபடி பலவிதமான மருத்துவ அறிவிற்கு எதிரான முயற்சிகளை மேற்கொண்டபடியால் கர்ப்பத்தில் உருவான குழந்தை கலைந்துள்ளது. இதன் காரணமாக ஏழை சிறுமிகளுடைய சரீரமும் கெட்டு அவர்களும் சிறு வயதிலேயே இறந்துள்ளதாக அந்த செய்தி குறிப்பிடுகிறது.

சில பிள்ளைகள் அவர்கள் சிறு வீட்டில் மழையில் ஈரமாய் நனைந்த களிமண் தரையில் படுக்க பாய் இன்றி கிழிந்த துணியோடு படுக்கும் பொழுது மிக எளிதாக நுரையீரல் பாதிப்பு, சளி, இருமல், காய்ச்சல், மலேரியா, சிக்குன் குனியா, நிமோனியா போன்ற வியாதிகள் வந்து கவனிப்பாரன்றி இறக்கின்றார்கள். சில பிள்ளைகள் தண்ணீர் ஓடும் ஓடைகளில் வெள்ளம் வரும்பொழுது இவர்கள் அடித்து செல்லப்பட்டு பரிதாபமாக மரிக்கிறார்கள். அடர்ந்த காடுகளில் இருக்கிற அட்டைகள், அரணைகள், விஷம் நிறைந்த பூரான்கள், சில சமயங்களில் காட்டு மிருகங்களுக்கும் இவர்கள் இரையாகிவிடுகிறார்கள். பசியின் கொடுமையால் கிடைக்கின்ற இலைகளையும் கொதிக்க வைத்து தண்ணீரை பிள்ளைகளுக்கு உணவாக தருகிறார்கள். அநேக பிள்ளைகளுக்கு நுரையீரல் பாதிப்பு, காய்ச்சல் ஏற்படுகிறது. நீங்களும் நானும் உதவி செய்கிற பிள்ளைகள் ஒரு வேளை உணவு கூட கிடைக்காமல் கஷ்டப்படுபவர்கள்.

டிசம்பர் மாதம் கண்டிபாளையம், சிறுகிணத்துபாளையம், மணல்மேட்டுபுதூர், மல்லிகாபுரம், அரசம்பாளையம் ஆகிய கிராமங்களில் வாழும் பிள்ளைகளுக்கு பாய், ஸ்வெட்டர், போர்வை, விட்டமின் சி, புரோட்டின் பவுடர், இருமல் சிரப் (Cough Syrup), நல்ல உணவு, டிபன்பாக்ஸ், குடை, கிறிஸ்துமஸ் இனிப்புகள் வழங்கப்பட்டது. மிகவும் ஏழ்மைப்பட்ட சிறைக் கைதிகளின் பிள்ளைகளுக்கு நல்ல உணவு, புரோட்டின் பவுடர் மற்றும் குளிர் காலத்திற்கு தேவையான மருந்துகளும் கொடுக்கப் பட்டது.

உண்மையாகவே கர்த்தர் இப்படிப்பட்ட பலிகளின் மேல் பிரியமாய் இருக்கிறார். இவ்விதமாக நாம் ஒரு பாவமும் அறியாத, வறுமையில் இருக்கிற ஏழை பிள்ளைகளுக்கு செய்கிற உதவிகளை கர்த்தர் பார்த்து, உங்களை ஆசீர்வதிப்பார். பூமியிலே நீங்கள் பாக்கியவான்களாக இருப்பீர்கள். நீங்கள் செய்யும் அனைத்து ஜெபங்களும் கேட்கப்படும்.

மேலும், ஏற்காட்டில் உள்ள செம்மநத்தம், வள்ளுவர்நகர், சோளூர், காட்டுமரத்தூர், பெரியக்காடு ஆகிய கிராமங்களில் வாழுகின்ற மிகவும் பின்தங்கிய கஷ்டப்படுகின்ற ஏழை மக்களுக்கு இந்த குளிர் காலத்திற்கு தேவையான போர்வை, விட்டமின் சி, புரோட்டின் பவுடர், குடை ஆகியவை வழங்கினோம்.

**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 36477148891 |
| Bank Name | : | State Bank of India |
| Branch | : | Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : | SBIN 0000930 |
| A/c Type | : | Current |

**IT Act–ன்படி Sec. 80G Exemption உண்டு**


info@mojindia.org

ministryofjesus.in
mojworld.org

Ministry of Jesus
dr. janejosh
jonathanmosesstira

drjane15


**இப்பொழுது நமது வலைதளப்பக்கத்திலும் உங்களுடைய உதாரத்துவமான காணிக்கைகளை அனுப்பலாம்**

www.ministryofjesus.in

**என்ற பக்கத்திற்கு சென்று என்ற பட்டனை கிளிக் செய்யவும்.**

## ஏழை மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டது. அதில் ஒரு சில புகைப்படங்கள் கீழே













என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; என் முழு உள்ளமே, அவருடையபரிசுத்தநாமத்தை ஸ்தோத்திரி.
என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.
அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி,
உன் பிராணனை அழிவுக்கு விலக்கிமீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி,
நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வால வயது போலாகிறது - சங்கீதம் 103: 1-5
இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறார், அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார் - சங்கீதம் 147: 3
அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்
- சங்கீதம் 107: 20

அன்பான SJ Saves Trust அறக்கட்டளையின் பங்காளர்களே!

பரிசுத்தமுள்ள மகாவல்லமையுள்ள தேவன் நம்முடைய எல்லா நோய்களினின்றும் சுகமாக்கவே விரும்புகிறார். எனினும், ஸ்திரீயினிடத்தில் பிறந்தமனுஷன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான்.

அவன் மாம்சம் அவனிலிருக்குமளவும் அதற்கு நோவிருக்கும் அவன் ஆத்துமா அவனுக்குள்ளிருக்கு மட்டும் அதற்குத் துக்கமுண்டு என்று பக்தன் யோபு 14 : 1, 22ல் கூறுகிறார்.

மாம்சம் நம்மில் இருக்கும் வரைக்கும் நமக்கு பலப்பல வியாதிகள் இருக்கத்தான் செய்யும். வியாதிகளுக்கு முக்கிய காரணம் நாம் வாழுகின்ற இடத்தை சுத்தமாக வைக்காத படியாலும், அதிகமான மனஅழுத்தங்கள், பாரங்கள், வெளியே சொல்ல முடியாத காயங்கள், ஏமாற்றங்களும் ஆகும். சில வியாதிகள் நாம் உண்ணும் உணவில் கலக்கப்படும் பலவிதமான கெமிக்கல்கள் (அஜினாமோட்டோ போன்று), செயற்கை உப்பு, அதுவுமல்லாமல் வயல்களில் நன்றாக விளைச்சல் உண்டாக, நாம் அன்றாட பயன்படுத்தப்படும் காய், கனிகளில் தெளிக்கப்படும் மருந்துகளினாலும் வருகின்றது. மற்றும் சிலசமயங்களில் ஒழுங்கான நல்ல மருத்துவமனைக்கு செல்லாமல் பணத்தை மிச்சப்படுத்த கொஞ்சம் கூட மருத்துவதுறையே தெரியாத, சுத்தமாக மருத்துவ அறிவற்ற மக்கள் அவசரத்திற்கு கொடுக்கிற மருந்துகளாலும் நோய்கள் வருகிறது. வளரும் சிறுவர்களை பயங்கரமாய் அடித்து துன்புறுத்தும்பொழுது அவர்கள் உறுப்புகள் வளரவளர பாதிக்கப்படுகிறது. அதிகபட்ச மருந்துகள் எடுப்பதின் நிமித்தமும் உறுப்புகளை அதுபாழாக்கு கிறது. இவைகள் போக கொள்ளை நோய்கள், வாதைகள், வைரஸ் பரவுதல்கள் மக்களைதாக்குகிறது. ஆனால் வேதத்தில் மோசேயை குறித்து, "மோசேமரிக்கிறபோது நூற்றிருபதுவயதாயிருந்தான்; அவன் கண் இருளடையவுமில்லை, அவன் பெலன் குறையவுமில்லை" (உபாகமம் 34:7) இவ்விதமாக கூறுகிறது. மோசேசாகும் வரைக்கும் நல்லசுகமாய் இருந்தான் என்று பார்க்கிறோம்.

எனினும், நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்காக மரித்து சிலுவையில் சொல் லொண்ணா துன்பத்தை அனுபவித்து, காயங்களை அவர் முடிவில் ஏற்றுக்கொண்ட படியால் அவருடைய தழும்புகள் எப்படிப்பட்ட வியாதிகளையும் குணமாக்கிறது. எனவே கர்த்தரை நம்புகிற நம்மை பலப்பலவியாதிகள் அவ்வப்போது தாக்கினாலும் இயேசுவின் தழும்புகளால் குணமாகிறோம் (ஏசாயா 53:5). நாம் ஒவ்வொருநாளும் தியானிக்கிற வேத வசனங்களிலும் புதியபலனடைகிறோம். இருப்பினும், எல்லோருக்கும் இந்த அறிவும், விசுவாசமும் இருக்காது.

நமது கிராமப்புற மருத்துவமனையில் நன்கு படித்த, திறமையான மருத்துவர்களை கொண்டு தரமான சிகிச்சை அளிக்கிறோம். இம்மருத்துவமனை ஆரம்பித்து மூன்று ஆண்டுகளாகிறது. இன்னும் நாம் எந்தவித முன்னேற்றமும் செய்ய இயலவில்லை. இதற்காக அதிக ஊக்கமாய் ஜெபியுங்கள். ஒவ்வொரு மாதமும் விசுவாசத்திலேயே இந்த மருத்துவமனை நடைபெறுகிறது. மருத்துவமனையின் முன்னேற்றத் திற்காக, ஆம்புலன்ஸ் சேவைக்காக தங்கள் வாழ்க்கையை திருமணம் செய்யாமல் கர்த்தருக்காக அர்ப்பணித்த சகோதரிகள் (ஜெயபிரதா சகோதரிகள்) கடந்த மாதம் ஒரு இலட்சம் **(Rs1,00,000/-)** கொடுத் துள்ளார்கள். அதற்காக தேவனை ஸ்தோத்தரிக்கி

றோம். இதைப் போல நீங்களும் கர்த்தரிடத்தில் பொருத்தனை செய்து தாங்குங்கள். அப்பொழுது ஏழைகளுக்கு நல்ல சிகிச்சை கொடுக்க முடியும். நான் மருத்துவமனை ஊழியத்தில் தான் இயேசுவை தரிசித்தேன். அவரது வல்லமையால் தீராத வியாதிகள் குணமடைந்தது. ஐந்து மரித்துப் போன நோயாளி களை எழுப்பினதை நேரடியாக நான் பார்த்தேன். இப்படிப்பட்ட உன்னதமான ஊழியத்தை மறவாமல் ஒவ்வொரு மாதமும் தாங்குவீர்கள் என்றால் சிறு துளி பெரு வெள்ளம் போல பெரிய காரியங்களை செய்யமுடியும். அல்ட்ரா ஸ்கேன், அறுவைசிகிச்சை அரங்கம் ஆரம்பிக்கப்பட தேவைகள் அதிகம். கர்த்தர் ஏற்ற உதவிகளை செய்யும் மக்களை ஏற்படுத்த ஜெபியுங்கள்.





## வாசகர்கள் கவனத்திற்கு

இப்பத்திரிக்கையை வாசிக்கின்ற வாசகர்களாகிய உங்களில் யாருக்காவது நமது மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொள்ளவேண்டுமென்றால் நீங்கள் வந்து சிகிச்சை பெறலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : **9655318991**

வரும் வழி : திருச்சி மத்திய பேருந்துநிலையத்திலிருந்து திண்டுக்கல் சாலையில் (சுமார் 15 கி.மீ) உள்ள ஜே.ஜே. பொறியியல் கல்லூரி விடுதியின் எதிர்புறத்தில் நமது மருத்துவமனை உள்ளது.




**Like us on Facebook: dr.anandastira; mrsmargretstira; joshua.athisayarajisaac; jane.joshua.90; anbarinoozhiyam (ministry of jesus)**

**உங்களின் கனிவான கவனத்திற்கு...**

**தங்களைப் பற்றிய தகவல்களைப் புதுப்பியுங்கள்!**

*அன்பிற்குரிய பங்காளர்களே!*

உங்களைப் பற்றியப் பல புதிய தகவல்கள் எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வராமலேயே உள்ளது. எங்களிடம் உள்ள பதிவேட்டில் கூடுதல் தகவல்களைச் சேகரிக்க உள்ளோம். எனவே, தங்களைப் பற்றிய கீழ்க்காணும் தகவல்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

1. பங்காளர் பெயர் : ..............................................................................

2. பங்காளர் எண் : ..............................................................................

3. அலைபேசி எண் : ..............................................................................

4. WhatsApp No. : ..............................................................................

5. பிறந்தநாள் : ..............................................................................

6. திருமண நாள் : ..............................................................................

7. இ-மெயில் (e-mail) : ..............................................................................

8. முழு விலாசம் (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்): ..............................................

..............................................................................................................

..............................................................................................................

9. பிற இன்றியமையாத தகவல்கள்: ..............................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

மேற்கண்ட தகவல்கள் அனைத்தும் சரியாகவும், தெளிவாகவும் இ-மெயில், கடிதம், **WhatsApp No. 95004 87059** மூலமாகவும் தெரியப்படுத்தலாம். இவை உங்களை எளிதில் தொடர்பு கொள்ளவும், உங்களின் ஜெபத்தேவை அறிந்து இன்னும் ஊக்கமாய் ஜெபிக்கவும் உதவியாக இருக்கும்.

**இந்தப் பக்கத்தைக் கிழித்தோ அல்லது ஜெராக்ஸ் எடுத்தோ பூர்த்தி செய்து அனுப்பலாம்.**

# வருஷங்கள்

**ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள் – நீதி. 3:13**

தொகுப்பு : Dr. ஜேன் ஜாஷ்வா

**பதில்களை வசன ஆதாரத்துடன் பிழையின்றி எழுதுங்கள்**

**உதாரணம்: கர்த்தருக்கு ஒரு நாள் எத்தனை வருஷம்போல் இருக்கிறது?**

**பதில் : ஆயிரம் வருஷம் போல - 2 பேதுரு 3:8**

1. 130 வருஷம் நான் இப்படி இருந்தேன். என் ஆயுசு நாட்கள் கொஞ்சமும் சஞ்சலமுள்ளதாய் இருக்கிறது என்று கூறினவன் யார், எப்படி இருந்தான்?

   ..................................................................................................................................

2. இந்த வருஷங்களில் இவற்றில் ஐந்தில் ஒரு பங்கை வாங்கும்படி யார் யாருக்கு ஆலோசனை கொடுத்தது? எந்த வருடம்? எதில் ஐந்தில் ஒரு பங்கு?

   ..................................................................................................................................

3. எபிரெயரின் ஒரு அடிமை எத்தனை வருடம் அவர்களை சேவிக்கலாம் என்று கர்த்தர் கட்டளையிட்டார்?

   ..................................................................................................................................

4. வருஷத்தில் இத்தனை தரம் இந்த இடத்தில் நீங்கள் போயிருக்கும் பொழுது ஒவ்வொருவரும் உங்கள் தேசத்தை இச்சிப்பது இல்லை என்று தேவன் கூறினார். எத்தனை தரம், எந்த இடத்திற்கு?

   ..................................................................................................................................

5. நீங்கள் அந்த தேசத்திலே வந்து புசிக்கத்தக்க கனிகளை தரும் மரங்களை நாட்டின பிறகு அவைகளின் கனிகளை இத்தனை வருஷம் புசிக்கப்படாமல் இப்படி எண்ணப்பட வேண்டும். எத்தனை வருடம், எப்படி எண்ணப்பட வேண்டும்?

   ..................................................................................................................................

6. வருஷத்திலே பத்து வெள்ளி காசையும், மாற்று வஸ்திரமும் உனக்கு வேண்டிய ஆகாரத்தையும் கொடுப்பேன் என்ற யார் யாரிடம் சொன்னது?

   ..................................................................................................................................

7. இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட 480ஆம் வருஷத்தில் எந்த ராஜா, எதைக் கட்ட தொடங்கினான்?

   ..................................................................................................................................

8. சாலொமோன் ராஜாவிற்கு ஒரு வருஷத்தில் எவ்வளவு பொன் வந்தது?

.....................................................................................................................................

9. தர்ஷீசின் கப்பல்கள் இந்த ராஜாவிற்கு, இத்தனை வருஷத்திற்கு ஒரு தரம் பலவிதமான பொருட்களை கொண்டு வரும். எத்தனை வருஷத்திற்கு ஒரு தரம், எந்த ராஜாவிற்கு?

.....................................................................................................................................

10. ஒரு கதையை போல எங்கள் வருஷங்களை கழித்துப் போட்டோம் என்று கூறினவர் யார்?

.....................................................................................................................................

11. இத்தனை வருட பஞ்சத்தை, தண்டனைகளில் ஒன்றாக, தேவன், இவனை தெரிந்து கொள்ள சொன்னார். எத்தனை வருஷத்து பஞ்சம், யாரிடத்தில் சொன்னார்?

.....................................................................................................................................

12. இந்த ராஜா தன் இளம் வயதிலேயே தாவீதின் தேவனை தேட ஆரம்பித்து, எந்த வருஷத்தில் தேசத்தை சுத்திகரிக்க தொடங்கினான். ராஜாவின் பெயர் என்ன?

.....................................................................................................................................

13. தன் ராஜ்ஜிய பாரத்தின் மூன்றாம் வருஷத்திலே தன்னுடைய பிரபுக்களுக்கும், ஊழியக்காரர்களுக்கும் விருந்து பண்ணின ராஜா யார்?

.....................................................................................................................................

14. இந்த வருஷத்தில் ஆண்டவர் உயரமும், உன்னதமுமான சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கக் கண்டேன் என்று கூறினான். எந்த வருஷத்தில், கூறியது யார்?

.....................................................................................................................................

15. இந்த ராஜா தான் ராஜ்ஜிய பாரம் பண்ணும் இரண்டாம் வருஷத்திலே இதை கண்டதினால் அவனுடைய ஆவியிலே கலங்கினான். அந்த ராஜா யார், எந்த வருஷத்தில், எதைக் கண்டான்?

.....................................................................................................................................

உங்கள் முகவரி, பங்காளர் எண் மற்றும் தொலைபேசி எண்ணை மறவாமல் எழுதுங்கள்.
விடைகளைத் தெளிவாகப் புரியும்படி எழுதி இந்தப் பக்கங்களைக் கிழித்து எங்களுக்கு அனுப்பவும்.

.....................................................................................................................................

.....................................................................................................................................

விடைகள் ஜனவரிமாதம் 31ஆம் தேதிக்குள் எங்களிடம் வந்து சேரவேண்டும்.

முகவரி: அன்பரின் ஊழியம், 10–வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி–18.

உங்களுடைய பதில்களை வினாத்தாளிலேயே எழுதுங்கள். தனிப்பிரதியில் எழுத வேண்டாம். நீங்கள் பதில்களை வைத்து அனுப்பும் கவரை அதிக பசை போட்டு ஒட்டாதீர்கள்.

## நவம்பர் மாத கேள்விகளுக்கான சரியான பதில்கள்

1. யாக்கோபு (உபாகமம் 32:9,10)
2. செயல், சூனியத்திலும் சூனியமாய் இருக்கிறீர்கள். (ஏசாயா 41:24)
3. திராட்சக்கொடிகள், இஸ்ரவேலின் மகிமை. (நாகூம் 2:2)
4. நினிவே. (நாகூம் 2:10)
5. துஷ்டமிருகங்கள் (எசேக்கியேல் 14:15)
6. கொப்பரை (எசேக்கியேல் 24:11)
7. எகிப்து தேசம், அதில் குடியிருக்கிற யாவரையும். (எசேக்கியேல் 32:15)
8. என் ஆத்துமாவை, தாவீது (சங்கீதம் 141:8)
9. சீயோன் குமாரத்தி, தரையிலே (ஏசாயா 3: 26)
10. மனுஷரை தூரமாக விலக்குவதினால், நடுமையம். (ஏசாயா 6 : 12)
11. ஆறுகளை, அரணிப்பான அகழிகள். (ஏசாயா 19: 6)
12. மூடன், பசியுள்ள ஆத்துமாவை, தாகமுள்ளவனுக்கு. (ஏசாயா 32: 6 )
13. அரமணை, வெறுமையாகும். (ஏசாயா 32: 14)
14. அரணான பட்டணங்களை, பட்டயத்தாலே. (எரேமியா 5: 17)
15. மோவாப் (எரேமியா 48 : 11, 12 )
16. ஏசாவை, மறைவிடங்களில் (எரேமியா 49: 10)
17. தூற்றுவாரை, பாபிலோன் (எரேமியா 51:2)
18. அடிமைப்படும்படி, பெலனற்றதும், வெறுமையானதுமான. (கலாத்தியர் 4: 9)
19. பசியுள்ளவர்களை, வெறுமையாய் (லூக்கா 1 : 53 )
20. யூதாவுக்கும், எருசலேமின் ஆலோசனையை (எரேமியா 19: 7 )

### சரியான விடை எழுதி பரிசு பெறும் நபர்களுக்கு என் வாழ்த்துக்கள்

1. திருமதி. ஜெயமணி ஜெயபாண்டியன், கடலூர்
2. திருமதி. இராஜேஷ்வரி, சென்னை
3. திருமதி. ஜேன் தர்மராஜ், திருநெல்வேலி
4. Sis. ரேய்ச்சல் ஹேமலதா, திருநெல்வேலி
5. Sis. நிர்மலா பால்துரை, திருநெல்வேலி
6. Sis. சந்திரா டேனியல், திருநெல்வேலி

### கன்னியாகுமரி மற்றும் சென்னை பகுதியிலுள்ள அன்பரின் ஊழியப் பங்காளர்கள் கவனத்திற்கு

நமது அன்பரின் ஊழியப் பிரதிநிதிகளாக கீழ்க்கண்டவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். எனவே உங்கள் ஜெப வேண்டுதல்களை அவர்களிடம் கூறி ஜெபித்துக் கொள்ளலாம். மேலும், நமது ஊழிய விபரங்களையும் அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

கன்னியாகுமரி
திரு. ஜெரால்டு - 82203 17472
சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள்
திருமதி. ஆனிலெஸ்லி - 94448 27384

dranandastira@mojindia.org, margret@mojindia.org, joshua@mojindia.org, jane@mojindia.org, info@mojindia.org







❖ இந்திய ராணுவத்தின் தரைப்படையின் பயன்பாட்டிற்காக ஏடிஏஜிஎஸ் (அடவான்ஸ்ட் டோவ்ட் ஆர்ட்டிலரிகன் சிஸ்டம்) பீரங்கிகளை, ராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டிநிறுவனம் (டிஆர்டிஓ) வடிவமைத்துள்ளது. உள்நாட்டு தொழில்நுட்பத்தில் இந்தபீரங்கிகள் தயாரிக்கப்படுகின்றன. இதன் தாக்குதல் திறன் அவ்வப்போது மேம்படுத்தப்பட்டு பரிசோதனை செய்யப்படுகிறது.

இந்நிலையில் மேம்படுத்தப்பட்ட ஏடிஏஜிஎஸ் பீரங்கி ஒடிசாவின் பாலசோர் சோதனை தளத்தில் சோதனை செய்யப்பட்டது. இந்த சோதனை வெற்றி கரமாக அமைந்ததாக ஏடிஏஜிஎஸ் திட்ட இயக்குனர் தெரிவித்தார். இது உலகின் மிகச் சிறந்த பீரங்கிஎன்றும், இது போன்ற பீரங்கி முறையை வேறு எந்த நாடும் உருவாக்கியதில்லை என்றும் அவர் கூறினார்.

❖ சூரியனை பூமி உள்ளிட்ட எட்டு கிரகங்கள் சுற்றி வருகின்றன. அவை ஒவ்வொன்றும் சூரியனில் இருந்து குறிப்பிட்ட தூரத்தில் இருக்கின்றன. அவை தாங்கள் இருக்கும் தூரத்துக்கு ஏற்றார்போல குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை சூரியனை சுற்றி வருகின்றன. ஒவ்வொரு கிரகமும் இதற்கு பல ஆண்டுகளை எடுத்துக் கொள்கின்றன.

❖ சூரிய மண்டலத்தின் மிகப்பெரிய கிரகம் வியாழன் இதற்கு அடுத்த இடத்தில் சனி கிரகம் உள்ளது. இரு கிரகங்களும் ஹைட்ரஜன், ஹீலியம் வாயுக்களை கொண்டது. இதில் சனி கிரகம் மிகப்பெரிய வளையம் ஒன்றையும் தன்னகத்தே கொண்டுள்ளது. வியாழன் 4 நிலவுடன் சேர்ந்து சுற்றி வருகிறது.

❖ சூரியனில் இருந்து வியாழன் 5வது வரிசையிலும், சனி கிரகம் 6வது வரிசையிலும் சுற்றி வருகின்றன. சூரியனுக்கும் பூமிக்கும் இடைப்பட்ட தூரம் 14 கோடியே 72 லட்சம் கிலோமீட்டர்.

❖ இதேபோல சூரியனுக்கும் பூமிக்கும் உள்ள தூரத்தை போல ஐந்து மடங்கு தூரத்தில் வியாழன் கிரகமும் ஏழு மடங்கு தூரத்தில் சனிகிரகமும் இருக்கின்றன. சூரியனை சுற்றியுள்ள ஒவ்வொரு கிரகமும் குறிப்பிட்ட வேகத்தில் சூரியனை சுற்றி வருகிறது.



❖ நாட்டில் கொரோனா பரவலை கட்டுப்படுத்த கடந்த மார்ச் 25ல் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக நாடு முழுதும் ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டன. இதன்பின் ஊரடங்கில் தளர்வுகள் அறிவிக்கப்பட்டதையடுத்து ரயில் சேவைகளை ரயில்வே துவக்கியுள்ளது. ஆனாலும் ரயில் சேவைகள் இன்னும் முழுமையாக துவக்கப்படவில்லை. இந்நிலையில் ரயில்வே வாரிய தலைவர் வி.கே.யாதவ் கூறியதாவது. கொரோனா பரவலால் ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டதால், ரயில்வேக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டில் பயணியர் ரயில் சேவைகள் மூலம் கிடைக்கும் வருமானத்தில் 87 சதவீதம் குறைந்துள்ளது.

## 800 ஆண்டுகளுக்குப் பின் வானில் கிறிஸ்துமஸ் நட்சத்திரம் தோன்றும் அரியநிகழ்வு

நீண்ட இரவைக் கொண்ட டிசம்பர் 21ஆம் தேதி ஒளியூட்ட இந்த ஆண்டில் வானில் இரண்டு கிரகங்கள் இணைந்தது. கிட்டத்தட்ட 800 ஆண்டு களுக்குப் பிறகு இந்த அரிய நிகழ்வு வானில் தெரிந்தது. சூரியமண்டலத்தின் இரண்டுமாபெரும் கிரகங்களான வியாழன் மற்றும் சனி ஆகியவை 21ம் தேதியன்று அருகருகே வந்தது. அப்போது இரண்டு கிரகங்களும் இணைந்து அடிவானில் ஒரு பிரகாசமான நட்சத்திரம் போல ஒளிர்ந்தது.

சனிக்கோளும், வியாழனும் கிட்டத்தட்ட 400 ஆண்டுகளுக்கு ஒருமுறை அருகருகே வருமென விஞ்ஞானிகள் கூறுகின்றனர். பூமியில் இருந்து பார்க்கும்போது இவை அருகருகே இருப்பது போல தோன்றினாலும் உண்மையில் லட்சக்கணக்கான கிலோ மீட்டர்கள் இடைவெளியிலேயே இருக்கின்றன. கடைசியாக 1226-ஆம் ஆண்டு இந்த கிரகங்களின் இணைவை பூமியிலிருந்து பார்க்கமுடிந்தது. அடுத்த 400 ஆண்டுகள் கழித்து 1623ஆம் ஆண்டில் இவை நெருங்கி வந்த காட்சி பூமியில் தென்படவில்லை என கூறப்படுகிறது. இதனால் 800 ஆண்டுகளுக்குப் பின் இந்த நிகழ்வு மீண்டும் பூமியில் தெரிந்தது.

## திருச்சியில்

**அபிஷேக கூட்டம்**
நாள் : ஜனவரி 23
(சனிக்கிழமை)

காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை

**குடும்ப ஆசீர்வாத ஜெபம்**
நாள் : ஜனவரி 30
(சனிக்கிழமை)

அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி 18

தேவ செய்தி: **Dr. ஆனந்த ஸ்திரா குடும்பத்தினர்**

## பங்காளர்களுக்கான ஆசீர்வாத ஜெபம்

**ஐதராபாத்தில்**
நாள் : ஜனவரி 9 (சனிக்கிழமை)
இடம் : YMCA ஹால்,
SP ரோடு, மணிக்கூண்டு அருகில்,
செகந்திராபாத்
காலை 9.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை
மாலை 4.00 மணி முதல் 9.00 மணி வரை

**விஜயவாடா**
நாள் : ஜனவரி 10 (ஞாயிற்றுக்கிழமை)
இடம் : ஹோட்டல் இலபுரம்
கன்வென்ஷன் ஹால், இரயில்வே ஸ்டேஷன் ரோடு,
காந்திநகர், விஜயவாடா
காலை 10.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை
மாலை 4.00 மணி முதல் 9.00 மணி வரை

பிரார்த்தனை : **Dr. ஆனந்த ஸ்திரா**

தொடர்புக்கு : 91770 87860, 99445 36343, 99944 82791

## சென்னையில்

**Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களை சந்திக்க ஓர் அரிய வாய்ப்பு
நேரம் : காலை 9.00 மணி முதல் 2.00 மணி வரை

ஜனவரி 2021
செவ்வாய்க் கிழமை **26**

இடம் : YMCA ரித்தர்டன் ரோடு,
வெப்பேரி, சென்னை

தொடர்புக்கு : 94888 45627 & 97907 01873

**Ministry of Jesus**
**WhatsApp No. 95004 87059**

# Rev.Dr.A. ஜாஷ்வா அவர்களின் பிரார்த்தனையின் மூலம் தேவன் செய்த அற்புதம்



## அற்புத சுகமும், நல்லவேலையும் அருளிய அதிசய தேவன்!

என் பெயர் ஜேன். எனக்கு நீண்ட நாட்களாக சரீர பெலவீனம் மற்றும் செரிமானப் பிரச்சனை இருந்தது. அதனால் அதிக பெலவீனத்துடன் காணப் பட்டேன். என் கணவரும் வேலை இல்லாமல் கஷ்டப் பட்டார். இந்தநிலையில் தான் நாகர்கோவிலில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு வந்து கலந்துக் கொண்டோம். கூட்டத்தின் முடிவில் Rev.Dr.A. **ஜாஷ்வா** அவர்களை சந்தித்து எங்கள் இருவருடைய நிலையைச் சொல்லி ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டோம். **சகோதரர் அவர்களும் எங்களுக்காக பாரத்துடன் ஜெபித்து அனுப்பி னார்கள்.** அத்துடன் எங்களையும் பொருத்தனை செய்யும்படி சொன்னார்கள். நாங்களும் பொருத்தனை யோடு ஜெபித்து வந்தோம். **ஜெபத்திற்கு பிறகு என் சரீரத்திலிருந்த அனைத்து பெலவீனமும் மாறிப் போனது, செரிமானப் பிரச்சனையும் நீங்கியது. நான் நன்றாக சாப்பிட ஆரம்பித்தேன். என் கணவருக்கும் சமீபத்தில் பெங்களூரில் நல்ல வேலை கிடைத்தது. கர்த்தர் எங்கள் இருவருக்கும் செய்த இந்த நன்மை களுக்காக கர்த்தரை மனதார துதிக்கிறேன். எங்களுக்காக பாரப்பட்டு ஜெபித்த சகோதரர் அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்பரின் ஆறுதல் தொலைக் காட்சி ஊழியத்திற்கு எங்களுடைய பொருத்தனை காணிக்கையை தருகிறோம்.**

**- திருமதி. ஜேன், பெங்களூர்**


## எமது YouTube சேனல்கள்



Ministry of Jesus - Dr. Ananda Stira



Dr Jane Joshua



My Deliverance Church

## எமது முகநூல் பக்கங்கள் (Face book)



Ministry of Jesus (Anbarin Oozhiyam)
@ministryofjesus.in



Ananda Stira
@dranandastira



Margretstira



Jane Joshua
@DrJaneJoshua



My Deliverance Church
@mydeliverance.church



Rev.Dr.A Joshua
@RevDrAJoshua

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2019-2021 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month


புத்தாண்டு ஆசீர்வாத ஜெபம்

திருநெல்வேலியில்

நாள் : ஜனவரி 15
(வெள்ளிக்கிழமை)
இடம் : செல்வி மஹால்
காளிமார்க் பஸ் ஸ்டாப் அருகில்
முருகன்குறிச்சி, பாளையங்கோட்டை

நாகர்கோவிலில்

நாள் : ஜனவரி 16
(சனிக்கிழமை)
இடம் : விஜயதா திருமண மண்டபம்
W.C.C. ரோடு, நாகர்கோவில்
தொடர்புக்கு : (0431) 2765386, 94888 45627 & 82203 17472

காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை



வாக்குத்தத்தச் செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா
Mrs. மார்கிரேட் ஸ்திரா

மதுரையில்
பங்காளர்களுக்கான
ஆசீர்வாத ஜெபம்

நாள்
ஜனவரி 14
(வியாழக்கிழமை
அரசு விடுமுறை)

இடம் : மாஸ் ஹால்,
ஹோட்டல் ஜான்ஸ் (PTR)
ஆம்னி பேருந்து நிலையம் எதிரில்,
மாட்டுத்தாவணி, மதுரை



தேவ செய்தி
Rev. Dr. A. ஜாஷ்வா
காலை 10 மணி முதல்
மதியம் 1 மணி வரை

திருச்சியில்
புத்தாண்டு
ஆசீர்வாத ஜெபம்

நாள்
ஜனவரி 16
(சனிக்கிழமை
அரசு விடுமுறை)

இடம் :
YMCA A/C ஹால்,
அரசு மருத்துவமனை எதிரில்
புத்தூர், திருச்சி

தொடர்புக்கு : (0431) 2765386 & 94888 45627


Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,

# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர் : 7 | இதழ் :1 | ஜனவரி 2021 | தனிப்பிரதி – ரூ. 20/– | ஆண்டு சந்தா ரூ 200/–
VOL:7 | Issue No:1 | January 2020 | Single Copy - Rs 20/- | ANNUAL SUBSCRIPTION : RS 200/-

**உன் சந்ததியின்மேல்
என் ஆவியையும்,
உன் சந்தானத்தின்மேல்
என் ஆசீர்வாதத்தையும்
ஊற்றுவேன்.**

**ஏசாயா - 44:3**